# நேசரின் ஒளி

# Nesarin Oli


| மலர் 5 | இதழ் 4 | இலவசப்பிரதி | டிசம்பர் 2017 |
| --- | --- | --- | --- |
| Volume 5 | Issue 4 | Free Distribution | December 2017 |




## நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்

(ஏசாயா 9:6)


Rev. V. இஸ்ரவேல் தேவதாசன்



# ஆசிரியர் உரை

### டிசம்பர் மாத வாக்குத்தத்தம்

## நமக்கு ஒரு பாலகன் பிறந்தார் நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்

கிறிஸ்துவுக்குள் அருமையான தேவனுடைய பிள்ளைகளே, நம் தேவனாகிய கர்த்தர் 11 மாதங்கள் கடந்து கண்மணி போல் நம்மைக் காத்து இந்த வருஷத்தின் கடைசி மாதத்தை காணும்படியாக செய்தாரே, அவருக்கு கோடானகோடி ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கிறேன். இதை வாசிக்கவும், இப்பத்திரிக்கைக்காக ஜெபிக்கவும். பத்திரிக்கைக்காக எல்லா காரியங்களை ஒழுங்குபடுத்தும் பிள்ளைகளுக்காகவும் அந்த குழுவை சேர்ந்த எல்லா பிள்ளைகளையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக. ஆம்! தடையின்றி வெளிவர அந்தந்த மாத பத்திரிக்கை அந்தந்த மாத முதல் இரண்டு தேதிகளில் கிடைக்க ஜெபியுங்கள். கர்த்தர் ஆசீர்வதிப்பார். நாம் எதைச் செய்தாலும் கர்த்தருக்கென்றே செய்வோம். கர்த்தர் தந்த ஊழியத்தை கட்டி எழுப்புவோமாக.

நாம் ஒவ்வொரு வருடம் டிசம்பர் மாதம் நடத்தும் உபவாச ஜெபங்களுக்காக ஜெபியுங்கள். டிசம்பர் ஒன்று, இரண்டு தேதிகளில் திருச்செந்தூர் அப்பொல்லோ கம்ப்யூட்டர் சென்டரில் நடக்கும் ஊழியங்களுக்காகவும், அந்த ஊழியத்தில் 10 வருடமாக அதை நடத்தும் பிள்ளைகள், அவர்கள் குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்படும்படி, இந்த மாதத்தில் 1, 2 தேதிகளில் நடக்கும் உபவாச ஜெபம் ஆசீர்வதிக்கப்பட, ஏராளமான பிள்ளைகள் வரவும் ஜெபியுங்கள். சென்னையில் ஆத்ம நேசர் ஐக்கியத்தில் நடக்கும் டிசம்பர் 15, 16, 17 தொடர் உபவாச ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள். டிசம்பர் 15 வெள்ளி காலை 10 மணி முதல் 17ஆம் தேதி மதியம் 2 மணி வரை நடக்கும் தொடர் உபவாச ஜெபங்களுக்காக ஜெபியுங்கள். தேவன் தந்த ஊழியங்கள் எல்லாவற்றிற்காகவும் ஜெபியுங்கள். அவைகள் தொடர்ந்து நடைபெற வேண்டும். ஊத்துக்குழி ஊழியங்கள், மெய்ஞ்ஞானபுரம் ஜெப சபை கட்ட வேண்டும். திருச்செந்தூர், பெரியார் நகர், பெரம்பூர், செம்பரம்பாக்கம் பழஞ்சூர் ஊழியங்கள், சத்யா நகரில் நடக்கும் ஓய்வு நாள் பாடசாலைக்காக ஜெபியுங்கள்.

இந்த நாட்களில் டெங்கு காய்ச்சலில் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் பூரண விடுதலை பெற இன்னும் ஆஸ்பத்திரியில் இருக்கும் வியாதியஸ்தர்களுக்காக ஜெபிப்போம். வாலிப பிள்ளைகள் பரிசுத்தமாய் பாதுகாக்கப்பட, உற்சாகத்துடன் கர்த்தருடைய வேத வசனங்களை ஏற்றுக்கொள்ள ஜெபியுங்கள். இந்த கிறிஸ்துமஸ் பண்டிகை நாட்களில் ஏழைகளுக்கு உதவுவோம். திக்கற்ற பிள்ளைகள், விதவைகள், ஆதரவற்றவர்களுக்கு உதவிசெய்வோம். நாம் புத்தாடை உடுத்தி ஆகாரங்கள் புசித்து திருப்தி அடைவது போல் ஏழை எளியவர்களையும் சபையில் கஷ்டப்பட்ட பிள்ளைகளையும், வெள்ளத்தில் காற்று மழையால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கும் உதவி செய்வோம். நம் தேசத்தலைவர்களுக்காக ஆட்சியாளர்களுக்காக மதத்தலைவர்களுக்காகவும், நம் தேசத்தில் அமைதியான முறையில் ஆட்சி நடைபெற ஜெபிப்போம். இந்த வருடத்தை நன்மையினால் நமக்கு முடிசூட்டி, புதுவருடம் செல்ல நமக்கு உதவி செய்வார். உங்கள் யாவருக்கும் கிறிஸ்துமஸ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

உங்களுக்காக ஜெபிக்கும்

**Rev. V. இஸ்ரவேல் தேவதாசன்**




ஆசிரியர்
Rev. V. இஸ்ரவேல் தேவதாசன்
Publisher & Editor

சிறப்பு இலவசப்பிரதி

அடிச்சிட்டோர்
அன்பு அச்சகம்


**நோக்கம்**

பாவம் செய்து நரகத்திற்கு போகும் ஜனங்களைத் தடுத்து தேவ ராஜ்யத்திற்கு செல்ல அவர்களை ஆயத்தம் செய்வது


**முகவரி**
**ஆத்ம நேசர் ஜெப ஐக்கியம்**
எண் 2 -106, அகரம் மெயின் ரோடு,
அகரம் தென், சேலையூர்,
சென்னை - 600 073.
**தொடர்புக்கு**
044 - 2229 4058 / 2689
94440 30053 / 94440 30503




நமக்கு ஒரு பாலகன் பிறந்தார் என்ற வார்த்தை ஏசாயா தீர்க்கதரிசியின் மூலமாக நமக்கு ஒரு பாலகன் பிறந்தார் பிறந்து விட்டார் என்று கொடுக்கப்பட்டுவிட்டது. அதற்கு முன்னாகவே பிதாவாகிய தேவன் உடைய முன்னறிவிப்பின்படியாக ஆதாம், ஏவாள் பாவத்தில் விழுந்தபோது அந்த சாத்தானாகிய பிசாசானவனைப் பார்த்து ஆதி 3:14,15,16 வசனங்களில் அறிவித்து விட்டார். 15ஆம் வசனத்தில் உனக்கும் ஸ்திரிக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார் என்ற வார்த்தை நிறைவேறும்படியாக, பாவத்தில் விழுந்துபோன அவருடைய ஜனங்களை மீட்கும்படியாக நமக்கு ஒரு பாலகன் பிறந்தார். ஆனால் இன்றும் அவரை பாலகனாகவே பார்த்து வழிபடும் ஜனங்கள் உண்டு. அவர்கள் வேதவசனத்தை சரியாக அறிந்து கொள்ள முடியாதபடி அந்த பாலகன் ஏசுவை உலகப்பிரகாரமான பண்டிகை நாட்களாக கொண்டாடி பிதாவாகிய தேவன் தந்த நோக்கத்தை விட்டுவிட்டார்கள்.

உள்ளே

1 தேவசெய்தி
5 விசுவாசிப்பவன் யார் ?
8 ஹாய் குட்டிஸ்
9 சாட்சிகள்
13 The Lord is with You
18 சாதோக்கு
19 கேள்வி பதில்
20 யூத் ஸ்பெஷல்
23 Blessing & Poverty
26 பெலப்படுத்தும் தேவன்
29 வேத வினாக்கள் & விடைகள்
30 சமையல்



அந்த குமாரனாகிய பாலகனை குறித்து வேதம் என்ன சொல்கிறது ஏசாயா 7:14 இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பெயர் இடுவாயாக. அந்த பிள்ளை தீமையை வெறுத்து நன்மையை பின்பற்றும் என்று தீர்க்கதரிசியால் எழுதியிருக்கிறது. மத்தேயு 1:23 அவள் இதோ ஒரு குமாரனை பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவாள். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, தேவன் அவருடைய நேசகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவை, இம்மானுவேல் என்பவரை நம்முடன் இருக்கவே உலகதோற்ற மூலம் ஏதேனில் உலாவியவர், அவரை நோக்கி கூப்பிடும்போது சமயத்துக்கேற்ற சகாயராய் இருந்து, அவருடைய ஆவியால் நம் முற்பிதாக்கள் வழிநடத்தின தேவன், எப்பொழுதும் நிரந்தரமாக தரவே அவருடைய பாலகனாகிய இயேசு கிறிஸ்துவை தந்தார். அவர் நம்முடைய பாவங்களுக்காகவே தன்னை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவே இந்த உலகத்தில் பரிசுத்த கன்னிகையாகிய கிருபைபெற்ற பாக்கியவதியாகிய மரியாள் இடம் பரிசுத்த ஆவியானவரால் அவர் பிறந்தார். இன்று நமக்குள் வாசம் செய்வதே அவர் பிறந்த நாள். அந்த மரியாள் அம்மாவைப் போல் நாம் கன்னிகைகளாக, பரிசுத்த ஜீவியம் செய்யும்போது, அவர் எப்பொழுதும் பட்சபாதம் அற்ற இயேசுகிறிஸ்து நமக்குள் வாசம் செய்கிறார். உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் அவர் நம்மோடு இருப்பார். நமக்குள் வாசம் செய்வார். நாம் நடக்க வேண்டிய வழியை போதிப்பாராக. சகாயம் செய்யும் கேடகமாக அவர் இருப்பார். அந்த பாலகன் நமக்குள் இம்மானுவேல் ஆக வாசம்செய்யும்படியாக, இந்த வருஷத்தின் கடைசி நாட்களில் வாஞ்சையுடன் தேடுவோம். அவர் பட்சபாதம் உள்ளவர் அல்ல.

அந்த பாலகன் பிறப்பை பார்த்தால் அவர் ஒரு புரட்சிகரமான பாலகனாக காணப்பட்டார். அந்த பாலகன் நம் சரித்திரத்தையே இரண்டாக பிரித்த பாலகன். ஒரு சத்திரத்தின் ஓரத்திலே மாட்டு கொட்டகையிலே கந்தை துணியில் சுற்றப்பட்டவராக காணப்பட்டார். ஆனால் அவரை ஏற்றுக்கொண்ட அவருடைய பிள்கைளாகிய நம்முடைய வாழ்க்கை ஆடம்பரமான அலங்கரிப்பு, வித்தியாசமான உணவுகள், விலை உயர்ந்த துணிகள் இவைகளை மற்றவர்கள் பார்வைக்கு உயர்ந்தவைகளாக கடன் வாங்கி ஜீவித்து அந்த பாலகன் வாழ்ந்த வாழ்க்கையை, அவர் பிறப்பை மறந்து விடுகிறோம். அவர் தாழ்மைகோலம் கொண்டார். அவர் யோசேப்பின் சாயலகாவோ, மரியாளின் சாயலாகவோ, அவர் குடும்பத்தின் சாயலாகவோ பிறக்கவில்லை. எபிரெயர் 1:3 இவர் மகிமையின் பிரகாசம் உடையவராய் காணப்பட்டார். அவருடைய பிள்ளைகளை பிரகாசிக்கப்பண்ணவே பிதாவின் சாயல் உடையவராய் காணப்பட்டார். சங்கீதம் 34:5 அவர்கள் அவரை நோக்கிப்பார்த்தார்கள். பிரகாசம் அடைந்தார்கள். நாமும் பிரகாசிக்கப்பட அவரை நோக்கிப் பார்ப்போம்.

அவர் பிறப்பதற்கு முன்பே பெயர் உடையவராய் பிறந்தார். அந்த பாலகன் பிறப்பதற்கு சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்பே ஏசாயா தீர்க்கதரிசி ஏசாயா 7:14 **"இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனை பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாயாக"** என்று முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட பாலகன் மத்தேயு 1:23 **"இதோ, கன்னிகை கர்ப்பவதியாகி குமாரனை பெறுவாள் அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவாயாக"**. அந்த பாலகன் வந்த நோக்கம் மத்தேயு 1:21 **"தமது ஜனங்களின் பாவங்களை மன்னித்து இரட்சிக்கவேண்டும்"**. இரட்சகராக, மீட்பராக, சகாயம் செய்யும் கேடகமாக பிறந்தார். அவருடைய நாமம் (இயேசுவின் நாமம்) சொல்ல சொல்ல எல்லா தீய வல்லமை

கடந்துபோகும். வியாதிகள் முழுமையாக சுகம் அடையும். அவருடைய நாமத்தினால் ஜெயம் உண்டு. பிலிப்பியர் 2:10-12 **"இயேசுவின் நாமத்தினால் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழ் உள்ளோர் முழங்கால் யாவும் முடங்கும்"**. அந்த நாமத்தை சொல்லி பரிசுத்தமாக்கப்பட்டோம். வெளி 21:7 **"ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்". "நான் அவன் தேவனாயிருப்பேன்"** வெளி 2:17 **"புதிய நாமத்தை முடிசூட்டுகிறவராக காணப்படுவார்".**



அந்த பாலகன் நம் எல்லாருக்கும் வழிகாட்டும் பாலகன். அவர் ஒரு நல்ல மேய்ப்பன். அவர் ஒரு பெரிய மேய்ப்பன். அவரே உன் ஆத்துமாவுக்கு வழிகாட்டி. மத்தேயு 2:2 சாஸ்திரிகளை வழிகாட்டி வந்த நட்சத்திரம். நம் வாழ்க்கையில் **"நானே வழியும் சத்தியமும்"** என்று சொல்லி அவருடைய சத்தியத்தின்படி நடத்துகிறார். இயேசுகிறிஸ்து நட்சத்திரமே. அவர் விடிவெள்ளி நட்சத்திரம். வெளி 22:16 நான் என் தூதனை அனுப்பினேன். நான் தாவீதின் வேரும், சந்ததியும் பிரகாசமான விடிவெள்ளி நட்சத்திரமாய் இருக்கிறேன். இன்னும் அந்த வெளிச்சத்தில் நடக்கிறவர்களாய் இருந்தால் பேதைகளும் இடறி விழமாட்டார்கள். அவரே நமக்கு வழிகாட்டியாகிய கிறிஸ்து அவரின் சத்தியத்தில் நடப்போம்.

அந்த பாலகன் தியாகியாக வெளிப்பட்டார். அவர் பிறந்த நாட்களில் ஏரோது அவருக்கு விரோதமாக எழும்பி அவரை அழிக்க நினைத்தான். அவரை அழிக்க முடியவில்லை. அப்பொழுது ஏராளமான ஆண் குழந்தைகள் பட்டயத்தால் மரித்தார்கள். ஏரோதின் சூழ்ச்சியின் பட்டயம் அவருக்கு விரோதமாக இருந்தது. கல்வார் வரை அவரை அழிக்க யுத்தம்போல் பிசாசு பின் தொடர்ந்தான். யோவான் 12:27 இதற்காகவே அழைக்கப்பட்டேன் என்று சொல்கிறார். நம்மை தேவனிடம் சேர்க்கும்படியாக அநீதி உள்ளவர்களுக்கு பதிலாக நீதியுள்ளவராய் ஒருதரம் பாடுபட்டார். உடம்பெல்லாம் காயப்பட்டவராய், வாரினால் அடிக்கப்பட்டார். முகத்தில் துப்பப்பட்டு நம்மை மீட்கும்படியாக சிலுவையில் தொங்கினார். 1தீமோ 2:6 எல்லாரையும் மீட்கும் பொருளாக தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷகுமாரனாகிய, தியாகி செம்மல் இயேசு கிறிஸ்துவே. மத் 20:28 மனுஷகுமாரன் ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யும்படியாக வந்தார்.

அந்த பாலகன் திரும்ப வருவார். சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்பு ஆதாமுக்கு வாக்கு கொடுத்தார். ஆதி 3:15 **"உனக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிகாலை நசுக்குவாய்".**

பரிசுத்தவான்கள், தீர்க்கதரிசிகளால் முன் அறிவித்து இந்த உலகத்தில் ஜீவித்து கடந்துபோன பாலகன் ஒரு நாள் திரும்ப வருவார். நாம் அவரை சந்திக்க ஆயத்தப்படுவோம். நான் சீக்கிரமாய் வருவேன் என்று கூறினவர் திருடனைப்போல திரும்ப வருவார். அந்த மரியாளாகிய கிருபை பெற்ற பாக்கியவதி மூலம் நமக்கு ஒரு பாலகனை தந்தார். நமக்கு ஒரு தியாகியாக வெற்றி சிறந்தவர், திரும்ப வருகிறார். அவர் வசனத்தை ஏற்றுக்கொண்டு பாவமன்னிப்பை பெற்று, அவருடைய இரத்தத்தால் கழுவப்பட்டு, இரட்சிப்பின் பாதையில் சென்று ஞானஸ்நானத்தினாலும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினாலும் பரிசுத்த மணவாட்டியாக இரவும் பகலும் அவரையே நோக்கிப்பார்த்து கொண்டு இருக்கும் பிள்ளைகளை தேடி வந்து இமைப்பொழுதில் அவருக்கு மணவாட்டியாக சேர்த்துக் கொள்வார். இந்த பண்டிகை நாள் நமக்கு ஆசீர்வாதமாக இருக்க நாம் எல்லாரிடமும் அன்பு செலுத்துவோம். அவர் நம்மேல் அன்பு செலுத்தி தியாகபலியாக தன்னைத்தானே நமக்காக ஒப்புக்கொடுத்தார். நாமும் அவரைப்போல அன்பு செலுத்துவோம். அந்த பாலகன் லூக் 2:52 இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார். அதைப்போல் நாமும் வளர்ந்து அவருக்கு பிரியப்படுத்தும் பண்டிகை நாட்களை நாம் கொண்டாடுவோம். கர்த்தர் ஆசீர்வதிப்பார். ஜெயம் எடுப்போம். வெற்றி சிறப்போம். அவர் நம்மை ஆசீர்வதிக்க சித்தங்கொண்டார். ஆசீர்வதிப்பார்.

உங்களுக்காக ஜெபிக்கும்
**Rev. V.** *இஸ்ரவேல் தேவதாசன்*

# வேத வாசிப்பு பகுதி

தேதியும் அதிகாரங்களும்

## டிசம்பர் மாத வேத வாசிப்பு பகுதி

| நாள் | வாசிக்க வேண்டிய வேதப்பகுதி | நாள் | வாசிக்க வேண்டிய வேதப்பகுதி |
|---|---|---|---|
| 1 | யோசுவா 7-9 அதிகாரம் | 16 | 1 சாமுவேல் 8-10 வரை |
| 2 | யோசுவா 10-12 வரை | 17 | 1 சாமுவேல் 11-13 வரை |
| 3 | யோசுவா 13-15 வரை | 18 | 1 சாமுவேல் 14-16 வரை |
| 4 | யோசுவா 16-18 வரை | 19 | 1 சாமுவேல் 17-20 வரை |
| 5 | யோசுவா 19-21 வரை | 20 | 1 சாமுவேல் 21-24 வரை |
| 6 | யோசுவா 22-24 வரை | 21 | 1 சாமுவேல் 25-28 வரை |
| 7 | நியாயாதிபதிகள் 1-4 வரை | 22 | 1 சாமுவேல் 29-31 வரை |
| 8 | நியாயாதிபதிகள் 5-8 வரை | 23 | 11 சாமுவேல் 1-4 வரை |
| 9 | நியாயாதிபதிகள் 9-12 வரை | 24 | 11 சாமுவேல் 5-8 வரை |
| 10 | நியாயாதிபதிகள் 13-15 வரை | 25 | 11 சாமுவேல் 9-12 வரை |
| 11 | நியாயாதிபதிகள் 16-18 வரை | 26 | 11 சாமுவேல் 13-15 வரை |
| 12 | நியாயாதிபதிகள் 19-21 வரை | 27 | 11 சாமுவேல் 16-18 வரை |
| 13 | ரூத் 1-4 வரை | 28 | 11 சாமுவேல் 19-21 வரை |
| 14 | 1 சாமுவேல் 1-3 வரை | 29 | 11 சாமுவேல் 22-24 வரை |
| 15 | 1 சாமுவேல் 4-7 வரை | 30 | 11 இராஜாக்கள் 1-4 வரை |

# விசுவாசிப்பவன் யார்?



கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகள் என் அன்பின் ஸ்தோத்திரம் வாழ்த்துதலை தெரிவித்துக் கொள்கிறேன். நாம் கிறிஸ்துவுக்குள் இருப்போமேயானால் நமக்குள் அன்பு, விசுவாசம், நம்பிக்கை வேண்டும்.

நாம் தேவனை விசுவாசிக்கும் பொழுது அநேக நன்மைகள் நடக்கும். விசுவாசித்தினால் அநேக பெண்மணிகள் ஜெயம் பெற்றவர்களாய் காணப் பட்டார்கள்.

**ஆபிரகாம்** விசுவாசித்தான். அவன் விசுவாசத்தின் தகப்பன் என அழைக்கப்பட்டான்.

**சாராள்** வயது முதிர்ந்த காலத்தில் ஒரு பிள்ளையை பெறுவாள் என்று ஆபிரகாமுக்கு தேவன் சொன்னார். (ஆதி 17ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது) ஆபிரகாம் விசுவாசித்தான். சாராளுக்கு ஈசாக்கு என்றும் ஒரு ஆண் குழந்தையை கொடுத்தார்.

**அன்னாள்** மலடியாயிருந்த அன்னாள் விசுவாசமுள்ள ஊக்கமான ஜெபத்தினால் சாமுவேலையும் மற்ற குழந்தைகளையும் பெற்றெடுத்தாள் 1சாமு 1-10,20,28 1சாமு 2-5

**சாரிபாத் விதவை** கர்த்தர் தேசத்தின் மேல் மழையை கட்டளையிடும் நாள் மட்டும் பானையில் மா செலவழிந்து போவதுமில்லை என்று கர்த்தர் சொல்கிறார் என்று எலியா சொன்ன வார்த்தையை விசுவாசித்த அந்த விதவை அவர் சொற்படி செய்தாள். பானையில் மா செலவழிந்த போகவுமில்லை கலசத்தில் எண்ணெய் குறைந்து போகவுமில்லை அவள் வீட்டாரும் அநேக நாள் சாப்பிட்டார்கள் 1இராஜா 17:8-16

**பெரும்பாடுள்ள ஸ்திரி** இயேசுவின் வல்லமையை விசுவாசித்தாள். வஸ்திரத்தின் ஓரத்தை தொட்டாள். பூரண சுகம் பெற்றாள். இயேசு அவளை திரும்பி பார்த்து மகளே உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார் மத் 9:20-22, மாற்கு 5:25-34

விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம். தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மை தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும். விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்.

**ஏனோக்கு** விசுவாசித்தான். மரணத்தை காணாதபடி எடுத்துக்கொள்ளப்பட்டான்.

நீதிமான் யார்? நீதிமான்களின் கூடாரங்களில் இரட்சிப்பின் கெம்பீரசத்தம் உண்டு.

**யோபுவை** பார் விசுவாசத்தில் உறுதியாயிருந்தான். அவன் நீதிமானாய் காணப்பட்டான். பல்வேறு துன்பங்கள் வந்த போதிலும் தேவனை மறுதலிக்காமல் காணப்பட்டான்.

நாம் சிறதளவு துன்பம் வந்தாலும் மறுதலிக்கிறவர்களாய் காணப்படுகிறோம். நமக்குள் விசுவாசம் இல்லை. விசுவாசத்தில் உறுதியாய் இருக்கிறவர்கள் கனி கொடுக்கிறவர்களாய் காணப்படுவார்கள். இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களால் அநேக அடையாளம் நடக்கும்.

1. இயேசுவின் நாமத்தினால் பிசாசை துரத்துவார்கள்.

2. சாவுக்கேதுவான் யாதொன்றையும் குடித்தாலும் அது அவர்களை சேதப்படுத்தாது.

3. வியாதியஸ்தர் மேல் கைகள் வைப்பார்கள். அப்பொழுது அவர்கள் சொஸ்தம் ஆவார்கள்.

4. சத்துருவின் கிரியைகளை மேற்கொள்ள பெலன் கொடுப்பவர்

5. நவமான பாஷைகளைப் பேசுவார்கள்.

லாசருவின் குடும்பத்தைப் பாருங்கள். அந்தக் குடும்பத்தினர் இயேசுவை ஏற்றுக் கொண்டவர்கள். இயேசு அவர்கள் குடும்பத்தினரை ரொம்பவும் நேசித்தார் (யோவான் 11:11)

அந்தக் குடும்பத்திலும் ஒரு சோதனை காணப்பட்டது. லாசரு வியாதிப்பட்டு மரணப்படுக்கை ஆகிவிட்டான். இயேசுவை ஏற்றுக்கொண்ட குடும்பம் விசுவாசத்தில் உறுதியாயிருநத்து. அந்தக் குடும்பத்தில் ஏன் வியாதி மரணப்படுக்கைக்கு நேராக கொண்டு சென்றது. அவர்கள் பாவம் செய்யவில்லையே. ஏன் அந்த மரணம் அவர்கள் பாவம் செய்யவில்லை ஆனாலும் அந்த பாடுகளை கடந்து செல்லவேண்டியதாயிருந்தது. தேவனை மகிமைப்படுத்துவதற்காகவே இது நடந்தது. (யோவன் 11:4) அதன்படி இயேசு கிறிஸ்து வந்து அற்புதம் செய்தார். அங்கே அவருடைய நாமம் மகிமைப்பட்டது. இயேசு கிறிஸ்து நம்மோடு இருந்தாலும் நமக்கு போராட்டம் உண்டு. நாம் அதைப் பொறுமையோடு சந்தித்துதான் ஆகவேண்டும். யோவான் 16:33 உங்களுக்கு உலகத்தில் உபத்திரவம் உண்டு. நாம் திடமனதாயிருந்து நாம் உலகத்தை ஜெயிக்க வேண்டும். நாம் விசவாசத்தை காத்துக்கொள்ள வேண்டும்.

நாங்கள் சிறு தொழிற்சாலை வைத்து இருந்தோம். சில மிஷின்கள் State Bank மூலமாக வாங்கி இருந்தோம். எங்களுக்கு Loan அடைக்கமுடியாதபடி ரொம்பவும் கஷ்டப்பட்டு கொண்டு இருந்தோம். திடீரென்று பேப்பரில் ஒரு 25 கம்பெனிக்கு மேலாக ஷீல் வைக்கப்போகிறோம் என்று வந்தது. அதில் எங்கள் கம்பெனியும் ஒன்று. நான் ஒவ்வொருநாளும் அந்தக் கம்பெனியின் பூட்டின் மீதும் ஜெபம் பண்ணி எந்த சத்துருவின் கரமும் அதின்மேல் படக்கூடாது என்று ஜெபம் பண்ணி சிலுவை போட்டுவிட்டு வருவேன். ஒரு நாள் திடீரென்று Bank-லிருந்து ஆபிஸர் எல்லாரும் வந்துவிட்டார்கள். அப்பொழுது Bank Manager சொன்னார் இதுவரை அவர்கள் ஒழுங்காக பணம் கட்டி வந்து இருக்கிறார்கள். இவர்களுக்கு ஒரு சிறிது காலம் கொடுப்போம் என்று அவர்கள் போய்விட்டார்கள். அதன்பின்பு கடன்களை நாங்கள் அடைத்து விட்டோம். விசுவாசத்தால் நீங்கள் எதைக் கேட்பீர்களோ அதை நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள். அதினால் நீதிமான் பிழைப்பான். நம்முடைய விசுவாசம் தேவன் மேல் பிரியமுள்ளதாய் காணப்படவேண்டும். அவர் எல்லா கண்களிலும் தயவு கிடைக்க செய்வார்.

இயேசு சுவாமி தன் சீடர்களுடன் படகிலே பிரயாணப்பட்டு போனார். அவர் வெகு களைப்புடன் காணப்பட்டபடியால் தூங்கி கொண்டு இருந்தார். அப்பொழுது பெரும் புயல்காற்று வீசத்தொடங்கின படியால் சீஷர்கள் பயந்துபோய் காணப்பட்டார்கள். அவர்கள் இயேசுவிடம் வந்து நாங்கள் மடிந்து போவோம் போலிருக்கிறது என்று கூறினார்கள். அதன் பின்பு அவர் கொந்தளிப்பை அதட்டினார். அது நின்று போனது. அப்பொழுது சீஷர்களைப் பார்த்து உங்கள் விசுவாசம் எங்கே? என்று கேட்டார். நாம் விசுவாசத்தில் உறுதி யாயிருந்தால் காற்று, புயல் நம்மை சேதப்படுத்த மாட்டாது. சீஷர்கள் இயேசு நம்மோடு இருக்கிறார். நாம் கடலில் மூழ்கி போவோமா என்பதை அவர்கள் நினைக்கவே இல்லை. இன்று நீங்களும் பயப்படலாம். நம்



குடும்பத்திற்குள்ளும் அநேக பிரச்சனைகள் வரலாம். நீங்கள் இயேசுவை விசுவாசியுங்கள். அந்த பிரச்சனை மலைபோல் வந்தாலும் பனி போல் மாற்றுவார். எத்தனை உபத்திரவங்களும், வேதனைகளும் வந்தாலும் காற்றையும் கடலையும் அதட்டி போட்டது போல அதட்டி போடுவார். நீங்கள் விசுவாசியுங்கள். அவர் உங்களுடன் கூட இருக்கிறபடியால் நீங்கள் பாதிக்கப்படமாட்டீர்கள். சேதமடையமாட்டீர்கள் என்று விசுவாசியுங்கள். விசுவாசத்தினால் அநேக போராட்டங்கள் வரும் 1 தீமோ 6 : 12, 2 தீமோ 4:16-18.

விசுவாசம் உள்ளவர்கள் கடவுள் மேல் உறுதியாய் அன்புள்ளவர்களாய், கனி கொடுக்கிறவர்களாய் காணப்படுவார்கள்.

கனிகொடுக்க வேண்டுமானால் கிறிஸ்துவில் நிலைத்திருக்கிறவர்களாய் காணப்படுவார்கள். மனந்திரும்புதலுக்கேற்ற கனி கொடுக்க வேண்டும். இரவும் பகலும் கர்த்தருடைய வேதத்தில் பிரியமுள்ளவர்களாய் காணப்படவேண்டும். ஜெபம் பண்ணவேண்டும்.

உன் நாவை காத்துக்கொள்ள வேண்டும். உலகத்திற்கு முன்பாக கறைபடாதபடி காத்துக் கொள்ள வேண்டும். இதுவே நம்முடைய விசுவாசம். விசுவாசத்தை காத்துக் கொள்ளாவிடில் வேதனையை அனுபவிக்க வேண்டியது இருக்கும். விசுவாசம் மறுதலிக்கப்படும். விட வேண்டிய காரியங்களை விட்டு மற்ற காரிங்களை சேர்த்துக்கொள்ள வேண்டும். விசுவாசத்தை காத்து நடக்கும்பொழுது நம் குடும்பத்தில் சந்தோஷம் மகிழ்ச்சி காணப்படும். பாவத்துக்கு செத்து நீதிக்கு பிழைப்போம். கடவுள் எல்லாரோடும் இருப்பாராக.




இப்படிக்கு,

மேபல் இஸ்ரவேல்

**ஹாய் குட்டீஸ் !!!**

# தேவ ஞானம்

என்ன குட்டீஸ்! எப்படி இருக்கீங்க? மழைத் தண்ணீரில் நல்லா விளையாடினீங்களா? நோய் வராமல் பார்த்துக்கொள்ளுங்கள். டிசம்பர் மாதம் என்றாலே கொண்டாட்டம்தானே! கிறிஸ்மஸ் கேக், கிறஸ்மஸ் தாத்தா எல்லாம் நினைவுக்கு வருகிறதல்லவா? அது இருக்கட்டும். ஆமா, கிறிஸ்மஸ் விடுமுறை வரும்போது விடுமுறை நாட்களில் என்ன செய்யணம்னு முடிவு எடுத்திருக்கீங்க? கொண்டாட்டம் அவசியம் தான். அதற்கும் மேல் ஜெபிக்கவும், வேதத்தை வாசிக்கவும் நேரத்தை ஒதுக்கிக் கொள்ளுங்கள். வேதத்தில் சாலமோன் ராஜா, தாவீது ராஜா, ஆபிரகாம் போன்றவர்கள் எப்போதும் தேவனோடு பேசிக்கொண்டு இருப்பார்களாம். அதற்குத்தான் சாலமோன் ராஜாவுக்கு தேவன் கொடுத்த பரிசு ‘ஞானம்’. நமக்கு ஞானம் இருந்தால்தான் நாம் மற்றவர்களை விட விசேஷித்தவர்களாக இருப்போம். இப்போது அக்கா ஒரு கதை சொல்கிறேன். காட்டில் சிங்கராஜா எப்படி ஞானத்தைப் பெற்றுக்கொண்டார் என்பதை இதனால் அறியலாம்.

ஒரு அடர்ந்த காட்டில் சிங்க ராஜாவின் தலைமையில் விலங்குகள் எல்லாம் சந்தோஷமாக வாழ்ந்து வந்ததாம். திடீரென்று ஒரு நாள் மான் ஒன்று சிங்க ராஜா, சிங்க ராஜா என்று கத்திக்கொண்டு வந்ததாம். பறவைகள் கூப்பிட்டுக்கொண்டு வானத்தை நோக்கிப் பறந்ததாம். இராஜா வெளியே வந்து பார்த்தார். ஒரே புகையாக இருந்தது. காடு முழுவதும் விலங்குகளின் கதறலே கேட்டதாம். காட்டுத் தீ வேகமாக பரவியது. ராஜா எங்களைக் காப்பாற்றுங்கள் என விலங்குகள் கதறின. செய்வது அறியாது திகைத்த சிங்க ராஜா ஒரு காரியம் செய்தார். தேவனே எனக்கு ஞானத்தைத் தாங்க. எங்களைக் காப்பாற்றுங்க என்று தேவனை நோக்கி ஜெபித்ததாம். உடனே தேவன் சிங்க ராஜாவுக்கு, தூரத்தில் ஒரு குளத்தையும் அதின் நடுவில் ஒரு பாறை இருப்பதையும் காட்டினார்.

சிங்க ராஜாவும் சக விலங்குகளும் அந்த குளத்திற்குச் சென்று பாறையின் மேல் ஏறிக்கொண்டார்களாம். பாறையைச் சுற்றி தண்ணீர் இருந்ததால் நெருப்பும் அதின் சூடும் அவர்களை அணுகவில்லை. எல்லோரும் தேவன் சிங்க ராஜாவுக்குக் கொடுத்த ஞானத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்களாம்.

பார்த்தீங்களா குட்டீஸ்! இது தான் உலக ஞானத்திற்கும் தேவன் நமக்குத் தரும் ஞானத்திற்கும் உள்ள வித்தியாசம் நாம் ஞானத்தைச் சம்பாதிப்பதால் அது நம்மைக் காத்துக்கொள்ளும் என்று வேதம் கூறுகிறது. அது மட்டும் அல்லாமல் தேவஞானம் வரும் போது அவருடைய வழியில் நடக்கிறோம். நடக்கும் போது அவருடைய வெளிச்சத்தை நம்மேல் பிரகாசிக்கிற தேவனாய் இருக்கிறார். இந்த கிறிஸ்மஸ் பரிசா இயேசப்பாகிட்ட ஞானத்தைக் கேட்டு அவர் அவர் வழியில் நடக்கிற பிள்ளைகளாய் இருங்கள்.

**மனப்பாட வசனம்**

உன் சுயபுத்தியின் சாயாமல்,
உன் முழு இருதயத்தோடும்
கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து
உன் வழிகளிலெல்லாம்
அவரை நினைத்துக்கொள்;
அப்பொழுது அவர்
உன் பாதைகளைச்
செவ்வைப்படுத்துவார்.
நீதி 3:5,6






கிறிஸ்துவுக்குள் அன்பான,
**Mrs.** *சாந்தி ஜென்சிங் ஜோசுவா*



# rhl;rpfs;

## தேவன் உங்களுக்குச் செய்த அற்புதங்களை சாட்சியாக எங்களுக்கு எழுதி அனுப்புங்கள்... அது அநேகருக்கு பிரயோஜனமாயிருக்கும்... ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பார்...

### விடுவித்து அற்புதம் செய்த தேவன்

**சகோதரி. ரோணிகா, பாரீஸ், சென்னை**



நான் இந்த இடத்திற்கு ஜெபத்திற்கு வரும்போது மிகுந்த போராட்டம், பிரச்சனையுடன் தான் வந்தேன். ஒவ்வொரு தடவையும் ஐயா எனக்காக ஜெபிக்கும்போது அதிகமாக பிசாசினால் அலைகழிக்கப்பட்டேன். தொடர்ந்து ஐயா பாரத்தோடு எனக்காக ஜெபித்தார்கள். கர்த்தர் எனக்கு பூரண விடுதலை தந்துள்ளார். பிரிந்திருந்த பிள்ளைகளுக்காக ஐயாவிடம் சொல்லி ஜெபித்தேன். கர்த்தர் அற்புதம் செய்து பிள்ளைகளை இணைத்துள்ளார். எனக்கு விடுதலை கொடுத்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம். எனக்காக எவ்வளவோ பாரப்பட்டு ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!

### சுகம் கொடுத்த தேவன்



**சகோதரி. அன்பரசி, சித்தாலப்பாக்கம்**

என் கணவனுக்கு கடந்த ஒரு மாதமாக காலில் மூட்டுப்பகுதியில் பயங்கரவலியினால் கஷ்டப்பட்டார்கள். அதற்கென்று மருந்து, மாத்திரைகளை பயன்படுத்தியும் பூரண விடுதலை இல்லை. இரண்டு நாட்கள் சுகமாக இருப்பார். மீண்டும் பயங்கர வலியாக இருக்கும். இந்நிலையில் கடந்தமாத அமாவாசை அதிகாலை ஜெபத்தில் கலந்து கொண்டோம். ஐயா ஜெபித்து தந்த ஜெப எண்ணெயை விசுவாசத்துடன் ஒரு நாளில் மூன்று வேளை பூசி ஜெபித்து வந்தேன். மூன்று நாளில் கர்த்தர் பூரண விடுதலை தந்துள்ளார். இப்போது எந்த பிரச்சனை இல்லாமல் பூரண விடுதலையுடன் இருக்கிறார்கள். சுகம் தந்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம். எங்களுக்காக ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!

## அற்புதங்களின் தேவன்



**Sis. மஞ்சுளா, செயிண்ட்தாமஸ் மவுண்ட்**

எனக்கு வேலையில் பதவி உயர்வு வெளியூரில் கிடைத்தது. என் மகனின் படிப்பின் காரணமாக நான் வெளியூர் செல்லவில்லை. ஐயாவிடம் சொல்லி ஜெபித்த சென்றேன். தேவன் இங்கேயே எனக்கு பதவி உயர்வை கட்டளையிட்டார். பிசாசின் போராட்டத்தில் பாதிக்கப்பட்டிருந்த என்னை ஐயா ஜெபத்தினால் கர்த்தர் எனக்கு விடுதலை கொடுத்தார். என் மகனுக்காக ஐயாவிடம் சொல்லி ஜெபித்தேன். தேவன் அவனின் முரட்டு சுபாவத்தை மாற்றினார். எனக்கு இருந்த தீராத தலைவலிக்காகவும் ஐயாவிடம் சொல்லி ஜெபித்தேன். தேவன் அதிலிருந்தும் எனக்கு பூரண விடுதலை தந்துள்ளார். இப்படியாக என் வாழ்வில் தேவன் எனக்கு செய்த எல்லா நன்மைகளுக்காக அவருக்கு கோடி ஸ்தோத்திரம். எங்களுக்காக பாரப்பட்டு ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!

## சுகம் கொடுத்த தேவன்

**Sis. கேத்தரின், பள்ளிக்கரணை**



நான் ஒரு மேட்டிலிருந்து கீழே விழுந்து விட்டேன். இதனால் எனது காலில் இரண்டு இடத்தில் எலும்பு உடைந்துவிட்டது. ரொம்ப கஷ்டப்பட்டேன். புத்தூர் கட்டு போடப்பட்டது. எனது இரண்டு மாத குழந்தையை கூட கவனிக்க முடியவில்லை. மிகவும் கஷடப்பட்டேன். இந்த சூழ்நிலையில் எனக்காக சபையார் அனைவரும் ஜெபித்தார்கள். ஐயாவும் எங்கள் வீட்டில் வந்து எனக்காக ஜெபித்து சென்றார்கள். தேவன் ஜெபத்தைக் கேட்டு, 6 மாத காலமாக பட்ட வேதனை பாடுகளில் இருந்து விடுதலை கொடுத்து நான் நடக்கவும், மீண்டும் தேவ சமூகத்தில் வந்து சாட்சி சொல்லவும் கிருபை செய்தார். சுகம் கொடுத்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம். எங்களுக்காக பாரப்பட்டு ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!

## புது ஜீவனை தந்த தேவன்



**Sis. எஸ்தர், பாப்பாங்குளம்**

மரணத்திற்கேதுவான நிலையில் இந்த இடத்திற்கு வந்தேன். ஐயா எனக்காக பாரப்பட்டு ஜெபித்தார்கள். கர்த்தர் ஐயா மூலம் என்னோடு பேசினார். நீ எழும்புவாய், நீ மரிக்கமாட்டாய், நீ வாழ்வாய் என்று பேசினார். அதன்படி தேவன் என்னை விடுவித்தார். பூரண விடுதலை தந்தார். எனக்கு ஒரு உயிர்மீட்பை கொடுத்திருக்கிறார். என்னை ஜீவனுடன் வைத்திருக்கிற என் தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!

## வார்த்தையை நிறைவேற்றிய தேவன்

**Sis. தங்கமுத்து, பெங்களூர்**

எந்த ஒரு பிரச்சனை, பெலவீனமாக இருந்தாலும் நான் ஐயாவிடம் சொல்லி ஜெபித்து செல்வேன். எனது பெரிய மகள் கீழே விழுந்து இடுப்பில் பலத்த அடி. பலவீனப்பட்டு இருந்தாள். சின்ன மகளுக்கும் சரீரத்தில் அதிக பெலவீனம். ஐயாவிடம் சொல்லி ஜெபித்தேன். ஐயா மூலம் கர்த்தருடைய வார்த்தை, நான் உன் பிள்ளைகளை பொறுப்பெடுத்திருக்கிறேன் நீ கவலைபடாதே என் கரத்தில் இருக்கிறார்கள். நான் விடுதலை தருவேன் என பேசினார். அதை வைத்தே நான் தினமும் ஜெபித்து வந்தேன். கர்த்தர் என் பிள்ளைகளின் பெலவீனத்தை மாற்றினார். மேலும் எனது இடது கையில் திடீரென்று பயங்கர வலி கையை தூக்க முடியவில்லை. அதிகாலையில் எழும்பி இயேசப்பாவிடம் நான் தேவ சமூகத்தில் சாட்சி சொல்லுவேன். எனக்கு சுகம் தாரும் என்று விசுவாசத்துடன் ஜெப எண்ணெயை பூசி ஜெபித்தேன். தேவன் விடுதலை தந்தார். இப்படியாக கர்த்தரின் வார்த்தையின்படி என் பிள்ளைகளுக்கு கொடுத்த விடுதலைக்காக கர்த்தருக்கு கோடி ஸ்தோத்திரம். தொடர்ந்து எங்களுக்காக பாரப்பட்டு ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!

## தீமையினின்று விலக்கி பாதுகாத்த தேவன்

**Sis. கமலா, தங்கசாலை (Mint)**

நான் இங்கு வந்து ஐயாவிடம் ஜெபித்து சென்ற பின் எனக்கு திருமணம் நடந்தது. கர்த்தர் இரண்டு பிள்ளைகளை தந்துள்ளார். கடந்த நாட்களில் ஆலோசனை ஜெபத்திற்கு வந்தேன். ஐயா எனக்காக ஜெபித்து விட்டு, 11 நாட்கள் உபவாசமிருந்து ஜெபி என வெளிப்படுத்தினார். நானும் அதன்படி இரவு நேரத்தில் ஜெபிக்க ஆரம்பித்தேன். 3 நாட்கள் ஜெபித்தேன். 4வது நாளில் கட்டிடவேலை செய்யும் என் கணவர் வேலைக்கு சென்ற இடத்தில் முதல் மாடியிலிருந்து கீழே விழுந்து விட்டார் என்று கேள்விப்பட்டேன். ஆனாலும் கர்த்தர் என் கணவரின் ஜீவனை பாதுகாத்தார். இதற்காகவே தேவன் என்னை 11 நாட்கள் உபவாசம் இருந்து ஜெபிக்க சொல்லியிருக்கிறார் என நினைத்தேன். மேலும் எனது இரண்டு பிள்ளைகளுக்கும் ஜுரம் அதிகமானதினிமித்தம் வலிப்பு வந்து விட்டது. அதற்காக ஐயாவிடம் சொல்லி ஜெபித்தேன். ஐயா மூலம் கர்த்தருடைய வார்த்தை என் இரத்தத்தை பானம் பண்ணக்கொடு என பேசினார். அதன்படி தினமும் கொடுத்து வருகிறேன் தேவன் இம்மட்டும் எல்லா பலவீனத்திற்கும் பிள்ளைகளை விலக்கி பாதுகாத்து வருகிறார். பாதுகாத்து வரும் தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!

## பாதுகாத்து வரும் தேவன்



**Sis. யூரனிசா, அன்னை சத்யா நகர்**

நான் ஒரு முஸ்லீம் மதத்தை சேர்ந்தவள். கர்த்தர் என்னை தெரிந்து கொண்டார். நான் இயேசப்பாவிடம் வருகிறதால் என் குடும்பத்தினர் என்னை பகைத்தனர். எனக்கு விரோதமான காரியங்களை செய்தனர். ஆனாலும் ஒவ்வொரு தடவையும் நான் ஐயாவிடம் வந்து ஜெபிப்பதால் கர்த்தர் என்னை பாதுகாத்து நடத்தி வருகிறார். எத்தனை போராட்டம் பிரச்சனை வந்தாலும் கர்த்தரே எனக்கு எல்லாமாய் இருந்து நடத்தி வருகிறார். என்னை நடத்தி வரும் கர்த்தருக்கு கோடி ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!

## அற்புதங்களின் தேவன்

**Bro. தாமஸ், கூடுவாஞ்சேரி**



பலவித பாடுகள், பலவீனத்துடன் இருந்த என் மகளுக்கு ஐயா ஜெபித்ததின் மூலம் தேவன் விடுதலை தந்தார். பயங்கர முதுகு வலியில் இருந்த எனக்கு ஐயா ஜெபித்து கொடுத்த எண்ணெயை விசுவாசத்துடன் பூசி வந்தேன். தண்ணீர் போட்டு வரும் இரண்டு இடங்களில் GST யின் நிமித்தம் எனக்கு இரண்டு ரூபாய் கூட்டித்தர கேட்டேன். அதற்காக ஐயாவிடம் சொல்லி ஜெபித்தேன். நீ போ நான் வாயில் வார்த்தை போடுவேன், நீ பேசு அற்புதம் செய்வேன் என பேசினார். நான் பேசப்போன இரண்டு இடங்களிலும் எவ்வளவோ போராட்டத்தின் மத்தியில், ஒரு ரூபாய் கூட்டித்தர கர்த்தர் கிருபை செய்தார். கடனில் இருந்த நான் ஐயா ஜெபத்தால் கடன் வாங்காதபடி கர்த்தர் நடத்தி வருகிறார். ஐயா மூலம் கர்த்தருடைய வார்த்தை வியாபாரத்தை ஆசீர்வதித்து கடனை அடைக்க வழி செய்வேன் என பேசியிருக்கிறார். அப்படியே செய்வார் என விசுவாசிக்கிறேன். அற்புதங்கள் செய்த தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!


## வேலையில் பதவி உயர்வை கட்டளையிட்ட தேவன்

**Sis. சாராள், சோழிங்கநல்லூர்**

எனத பெரிய மகன் B.E., முடித்து வேலை செய்கிறான். அவனுக்கு வேலையில் அநேக போராட்டம் இருந்தது. அவனது பதவி உயர்வுக்காக ஐயாவிடம் சொல்லி ஜெபித்து வந்தேன். நான் உயர்த்துவேன் என்று கர்த்தர் பேசினார். அதன்படி எத்தனையோ பிரச்சனை மத்தியிலும் தேவன் அவனுக்கு Team Leader என்ற பதவியை கொடுத்து உயர்த்தினார். தேவன் செய்த அற்புதத்திற்காக கோடி ஸ்தோத்திரம். எங்களுக்காக தொடர்ந்து ஜெபித்த ஐயாவுக்கு நன்றி!



# THE LORD IS WITH YOU



I am glad to greet you in the matchless name of our Lord Jesus Christ and praise the Lord for wonderful things He has done in this year 2017. Indeed, a right time for everyone to look back and say 'Thank you Lord'. For He has been very gracious to us, protected us, blessed us and comforted us in all circumstances. We were never left alone. The Lord was with us in the good and tough times of life. He had not forsaken us, our family and children. He walked with us when we walked through waters and fires of life. If He had not come with us, we wouldn't have reached to this month. It was His abundant grace that forgave our sins, transgressions and reconciled us to Him. Today, wherever you are, raise your voice and thank God for all His goodness and mercy that endured us till today.

He is the Alpha and Omega; the beginning and the end; He lives with us forever. Time or space or anything cannot destroy His existence. He is beyond all that we could conceive through our mind. This God is telling you today, 'I am with you'. I know many of us want this message because I was strengthened by the word of the Lord, I am with you. Isaiah 41:10 says, "*Don't be afraid, for I am with you. Don't be discouraged, for I am your God. I will strengthen you and help you. I will hold you up with my victorious right hand*". Even when you have grown older, it is the words of your father that strengthens you even though he can't help you physically or financially. How much more this verse means when the creator of the heaven and earth says this to us, “I am with you”. And how big it is to have a father who is the creator of all saying to us, “I am with you”.

In life, we all need that companion, that one positive, strong person to come along with us to encourage us, to advise us. There is a void in every man's life without that companion. That one companion is Lord Jesus Christ. Even though you are married, your spouse can't fill that gap. It is still a void until and unless it is filled by our Lord Jesus Christ. Many think

worldly riches will give that peace and joy in life. Anything attained with worldly riches is indeed temporal. Where would you go when you are tossed by the problem that your richness can't help? Who would you lean on? You need this Jesus, who is called Immanuel, "*The virgin will conceive and give birth to a son, and they will call him Immanuel*" (which means "God with us") (Matthew 1: 23). The Lord was given to us to be with us. Jesus did not come to take a special place in the world. He had come to take that special place in everyone's life. Because the Lord loved us so much and found the void without His presence, He gave His only son to be with us. This is the good news that the world was waiting for - a Savior, a God in the form of man to redeem everyone from darkness and lift them to live with him in the marvelous light.

The good news for the shepherds in the night of Jesus birth was, "...*Do not be afraid. I bring you good news that will cause great joy for all the people. Today in the town of David a Savior has been born to you; he is the Messiah, the Lord.*" (Luke 2: 10 -11) Yes the Savior was given unto us to be our everlasting God. The Immanuel, the Lord is with us, is truly with us as our good father, brother, an almighty God, a redeemer, a healer, a provider and as everything that we need. When the Lord is with you, you become a special person. Same way, if anybody is without Him then there is a big void in their life. Who is this Immanuel? Isaiah says that He is ".. *And His name will be called Wonderful, Counselor, Mighty God, Everlasting Father, Prince of Peace"* (Isaiah 9:6). When Jesus is with you, you shall be a wonderful and special person in the world and in the kingdom of God. But anybody who has ignored Him and His presence, will surely be missing that very precious life.

## God promises to be amidst us

Our Lord promises that, "*I shall be with you till the ends of days*". Our life's journey is uncertain. Many who have promised to stick together and help us and come along through our life are no more with us. Many though they want to be with us are not with us because of their unavoidable situations. But the truth is we all need a real companion all through our life. But unfortunately people try to live their life in the shadow of jobs, friends, entertainment and travelling to get rid of that loneliness. Like the psalmist says, some trust in horses, some trust in the chariots but we trust in the living God. All who trust in the things of the world will go weary, faint and fall but surely the one who walks with the Lord shall be blessed. Because the one who walks with us is greater than the things of this world. He is an almighty God who is above all the authorities of the earth. So when the Lord walks with somebody that man or woman shall never be intimidated by the world or the situations of the world. Any shame, any loss, any failure they face are all faced with the Lord by their side. The Lord beside them as their counselor, mighty wall of protection and as their redeemer.


If you are walking in the path of shame or loneliness, never worry. For you have an everlasting father who promises to walk with you when you go through the valley of shadow of death. Isaiah 43;2 promises "*When you pass through the waters, I will be with you; and when you pass through the rivers, they will not sweep over you. When you walk through the fire, you will not be burned; the flames will not set you ablaze"*. Yes, life gives us

many things we don't expect. But when you have the Lord by your side, you can face any storm irrespective of how big it is. My parents are a good testimony of how they faced the giants of the world. We all could have perished as a family even many years back and you all would have not known about us. It is the Lord who was with us when we walked through waters, when tight problems that were drowning us and the fierce fire of enemies wanted us to be destroyed. Life had not been easy to us. We passed through the waters and fires frequently, still not drowned or burnt by the witchcrafts and sorcery. It was neither our strength nor our bullet proof positive mind. It was just because He walked with us, delivered us, comforted us to flourish and stand strong like the trees of the Lebanon.

Psalms 18: 29 says *"In your strength I can crush an army; with my God I can scale any wall"*. Yes, when the Lord is with us, He changes our weakness, foolishness and lacking into a blessing. When you start walking with Jesus each day, you will experience a super natural providence and guidance in life. Because it is not the image of you anymore, it is the image of the Lord, presence of the Lord, power of the Lord that is walking with you. That's why Moses was able to stand before the most powerful person on the earth at that time, the Pharaoh. Moses who was supposed to be standing as a criminal before Pharaoh for the murder of an Egyptian, was now standing brave. He was raising his voice to Pharaoh to let the people of the Lord to go and that is incomprehensible. It all happened just because the Lord was with Moses. Because the Lord was with Moses, he was able to raise against Pharaoh, his army, sorcery, witchcraft, and all the authority on earth and in heaven. Moses knew it was the Lord who had been with him and strengthened him to do greater things. So whatever be your situation, don't worry if you have Jesus with you. Then anything that is against you shall become nothing irrespective of how big it is today. Anything and everything should submit to Him. It was evident to see the Lord was with Moses, when the Lord spoke to Joshua saying, "*No one will be able to stand against you all the days of your life. As I was with Moses, so I will be with you; I will never leave you nor forsake you*" (Joshua 1:5).

## God's blessings amidst us


Wherever our Lord is there, there is joy, love, peace and miracles. Bible says, "*Now the Lord is the Spirit, and where the Spirit of the Lord is, there is freedom*" (2 Corinthians 3:17). The Lord in the form of Holy Spirit is dwelling in our midst, in our family, in our church and everywhere we invite Him to be with us. He is liberating us from sin and all the clutches of evil spirits. If the Lord lives amidst us in our home, church and workplace, then there shall be splendid things happening around us. The good example is our Dr. D.G.S Dhinakaran uncle. When he was about to enter the



ministry, he said to the Lord, "Lord, you should come wherever I go and should stand next to me when I preach to people". As requested, the Lord said, I shall be with you. Later, we all know how the whole of India is blessed by his ministry then and today. Millions of people are saved, healed and received the presence of the Lord in their lives.

Yes, in the same way, when the Lord is in our midst, it doesn't matter who you are. He lifts you up and honors you. Exodus 34: 10 says, "*The Lord said, See, this is what I will undertake: before the eyes of your people I will do wonders, such as have not been done in all the earth or in any nation: and all your people will see the work of the Lord, for what I am about to do for you is greatly to be feared*". He does the things that would glorify the Lord and His children. Our God is creative God, He doesn't repeat the same thing. He does mighty things which no eyes have seen and whatever he does it is magnificent in magnitude. When the Ark of the Covenant was in the house of Obed, his house was flourishing than anybody else in the land. It even made King David jealous. He feared and made arrangements to take the ark from the house of Obed. So is the work of our Lord in our life. If you allow Him to be in your life, you shall see the work of the Lord and his magnanimous personality. Whoever misses Him in their life are for sure missing these blessings. For your family to be blessed, have Him in your midst.

## Invite God to be in your midst



"*Behold, I stand at the door and knock. If anyone hears my voice and opens the door, I will come in to him and eat with him, and he with me*" (Revelation 3: 20). He loves us so much and wants to live in our midst. So He is always at our door step, waiting for us to invite Him to enter our life. If you do not have the Lord in your life, JUST INVITE HIM. He is ready to come in and dwell among you. Many could say, I have already invited Jesus into my life, so I am with Jesus. But the truth is, how many of us have given Jesus the appropriate place in our life? Who owns the first position in your life? Indeed, many of us have given Him the last say in our homes. Bible and prayers have no place in our schedule. We have overlooked Him and ignored Him in our lives.

Such a rejection happened during the birth of Jesus. Jesus had no place in the world to be born. King Herod, though he understood Jesus as the king of Kings through the nobles, wasn't able to accept Him as the king over him. King Herod was afraid to accept the authority of Jesus over him because his heart was haughty. But there were shepherds who accepted and were glad to bow down and worship Him. That's why He was born in a manger and lived among them. Even today, He dwells among His children who have accepted Him.

The Wedding of Cana explains how the presence of the Lord changes our lives. Jesus was

invited to the wedding. Because He was invited, Jesus attended the wedding. Because he was in their midst, a miracle happened in the wedding. So is it for us - If only we invite Him to live in our midst, He will be among us. When He dwells among us, we will lack no blessing.

In the wedding when there was lacking, the family of the house decided to approach Jesus. There are some of us who have invited Jesus into our house. He is also in our midst. But we had not believed that Jesus can handle our family crisis. Because they believed in Him, they tried to reach Him through His mother and directly Jesus Christ. How are we reaching out to Him today? How many times do we pray in a day? How many hours do we read the bible, meditate and worship Him? Without seeking Him, we can't receive Him in our midst. So begin to seek Him before it is too late for you.

After they sought Jesus, the family of the house waited for Him to act. As they waited on the Lord, He started His work. As they were waiting, they obeyed his words. When the Lord is with us we also need to obey to his instructions written in the bible. The wedding family obeyed and filled the empty jars even though there were not able to comprehend His actions. They obeyed Him. Because they obeyed, He lived among them, worked miracles and brought in peace and joy.

So, in this Christmas, before we invite somebody to our Christmas celebrations, let us invite Jesus. Give Him the authority over your life. Wait for Him to guide you. Obey His commands. Then, the Immanuel, 'the Lord is with us' shall never depart from us. As promised, He shall be among us.

***"I am with you to protect you "***

***"For I am with you, and no one is going to attack and harm you"***

***"And I myself will be a wall of fire around it,'***
***declares the LORD, 'and I will be its glory within."***

***"I am with you always, even to the end of the age"***

(Jeremiah 1:8, Acts 18:10,
Zechariah 2:5, Matthew 28: 20)

May the Lord Immanuel be with us from now on till the end of days! Amen. Merry Christmas!

- Bro Densingh Joshua Israel



# சாதோக்கு

## (நீதிமான்)



தொழில் : ஆசாரிய ஊழியம்

தகப்பன் : அகிதூப்

இந்த சாதோக்கு ஆரோனுடைய குமாரனாகிய எலெயாசார் வம்சத்தை சேர்ந்தவன். இவன் தாவீது இராஜா முன் காலத்தில் ஆசாரியானாய் இருந்தான்.

தாவீது தன் மகனாகிய அப்சலோமுக்கு பயந்து, தப்பி ஓடினபோது, அவனும் லேவியரும் கர்த்தருடைய பெட்டியை எடுத்து தாவீதினிடத்திற்கு கொண்டு போனார்கள். மறுபடியும் எருசலேமிற்கு கொண்டு வந்து வைத்தார்கள். அப்சலோமிடத்திலிருந்தும், நகரத்திலிருந்தும் செய்திகளை சேகரித்து தாவீதக்கு இரசகசியமாய் அறிவித்தார்கள். அதின் நிமித்தம், தாவீதும் அவனோடு இருந்தவர்களும் இரவோடு இரவாக யோர்தான் நதியை கடந்து தப்பினார்கள்.

அப்சலோம் மாித்த பின்பு ஆசாரியனாகிய சாதோக்கும், அபியத்தாரும் யூதா ஜனத்தின் மூப்பரோடு பேசி, மறுபடியும் தாவீதை அழைத்து வந்தார்கள்.

தாவீதின் மகன் அதோனியா ராஜாவாக எத்தனித்தபோது, சாதோக்கு தாவீதின் பக்கம் சார்ந்திருந்தான். இந்த சாதோக்கு தைலக்குப்பியை எடுத்து சாலொமோனை இராஜாவாக அபிஷேகம் பண்ணினான்.

இந்த சாதோக்கு தாவீது அனுபவித்த உபத்திரவங்களை எல்லாம் அனுபவித்து, தாவீதோடு இருந்து தேவனுடைய பெட்டியை சுமந்து ஆசாரிய ஊழியம் செய்தான். பின் நாட்களில் இவனை சாலொமோன் ராஜா பிரதான ஆசாரியனாக்கினான்.

இப்படி உண்மையாய் நீதியாய் ஊழியஞ்செய்த சாதோக்கின் புத்திரரை கர்த்தர் "வழிதப்பி போகாமல் என் காவலை காத்துக்கொண்ட பரிசுத்தமாக்கப்பட்ட ஆசாரியர்கள்" என்று கூறி அவர்களுக்கு சுதந்திரம் கொடுக்கப்பட்டது.

அதுபோல நாமும், உண்மையாய் கர்த்தரை பின்பற்றி, பாடுகள் சகித்து, நீதியாய் நடந்து, கர்த்தரிடத்திலிருந்து ஆசீர்வாதத்தையும் சுதந்திரத்தையும் பெற்றுக்கொள்ள கிருபை தருவாராக.

### வசன இருப்பிடம்

2 சாமு 8:17,

2 சாமு 15:29, 35

2 சாமு 19:1, 20, 25

2 ராஜா 4:4

2 ராஜா 2:35

எசேக்கியேல் 40:46, 48:11

# கன்னியின் வயிற்றிலிருந்து ஒரு மனிதன் பிறக்க முடியுமா? இயேசுவின் கன்னி பிறப்பு சாத்தியமா?

கன்னி பிறப்பின் உபதேசம் என்பது மிகவும் அவசியமான ஒன்று. (ஏசாயா 7:14, மத்தேயு 1:23, லூக்கா 1:27,34) முதலில் வேதவாக்கியங்கள் இந்த நிகழ்வை எப்படி விளக்குகின்றன என்று பார்ப்போம். மரியாளின் (லூக்கா 1:34) "இது எப்படி ஆகும்" என்ற கேள்விக்கு பதிலாக காபிரியேல் பரிசுத்த ஆவி உன்மேல் வரும், "உன்னதமானவருடைய ஆவி உன்மேல் நிழலிடும்" (லூக்கா 1:35) என்று கூறுகிறான். தேவதூதன் யோசேப்பிடம் மரியாளை விவாகம் பண்ண பயப்படவேண்டாம் என்று தைரியப்படுத்துகிறான். "அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது" (மத்தேயு 1:20) "அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள்" (மத்தேயு 1:18) என்று கன்னியைக் குறித்து கூறுகிறார். கலாத்தியர் 4:5 கன்னி பிறப்பைக் குறித்து போதிக்கிறது. "ஸ்திரியினிடத்தில் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார்."



இந்த வாக்கியங்களிலிருந்து இயேசுவின் பிறப்பு மரியாளுடைய உடலில் பரிசுத்த ஆவியானவர் நிழலிட்டதனால்தான் உண்டானது என்று தெள்ளத்தெளிவாகிறது. பொருள் தன்மையில்லாத (ஆவி) மற்றும் பொருள் தன்மையுடைய (மரியாளின் கர்ப்பபை) இவை இரண்டும் ஈடுபட்டுள்ளது. மரியாள் தானே கர்ப்பம் தரித்திருக்க முடியாது. அப்படி இருக்கும்போது அவள் ஒரு பாத்திரமாய் மட்டுமே இருந்திருக்கிறாள். கடவுள் மட்டுமே மனு உருவெடுத்தல் என்ற அற்புதத்தை நிகழ்த்தியிருக்க வேண்டும்.

ஆனபோதிலும் மரியாளுக்கும் இயேசுவுக்கும் இருந்த உடல்ரீதியான தொடர்பை நாம் மறுப்போமானால் இயேசு ஒரு மனிதனாக இருப்பது என்பது முடியாத காரியம். வேதம் முழுமையான மனிதனாக நம்மைப்போல் இருந்தார் என்று போதிக்கின்றது. இதை அவர் மரியாளிடத்திலிருந்து பெற்றுக்கொண்டார். அதே நேரத்தில் இயேசு முழுவதும் கடவுளாக, நித்தியமாக, பாவசுபாவம் இல்லாதவாராகவும் இருந்தார். (யோவான் 1:14, 1தீமோத்தேயு 3:16, எபிரெயர் 2:14-17)

இயேசு பாவத்தில் பிறக்கவில்லை. அதாவது அவருக்கு பாவசுபாவம் இல்லை (எபிரெயர் 7:21) பாவசுபாவம் என்பது தகப்பனின் மூலமாக ஒரு சந்ததியிலிருந்து அடுத்த சந்ததிக்கு மாறிக்கொண்டிருந்தது. (ரோமா 5:12,17,19) "கன்னி பிறப்பு" என்பது இந்த பாவ சுபாவத்தின் இடையூரை சுற்றிவளைத்து, பரிசுத்த ஆவியின் உதவியால், நித்திய கடவுளை ஒரு முழுமையான மனிதனாக இருக்க அனுமதித்தது. எனவே இயேசு கன்னி பிறப்பு என்பது முற்றிலும் உண்மையானதாகவும், சாத்தியமானதாகவும் உள்ளது.

# இதுவல்லோ அன்பு.... யூத் ஸ்பெஷல்

அன்பான வாலிப சகோதர, சகோதரிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். இந்த பண்டிகை நாள் உங்களுக்கு் மகிழ்ச்சியாகவும். நிறைவாகவும் இருக்க வாழ்த்துகிறோம்! தேவனுடைய அன்புக்கு நன்றி சொல்லி நீங்கள் கொண்டாடும் இந்நாட்களில் அவருடைய அன்பு எப்படிப்பட்டது என்பதையும், அதற்கு நாம் மறுமொழி என்னவாக இருக்க வேண்டும் என்பதையும் கருத்தாய் அறிந்து கொண்டாடினால் இந்த கிறிஸ்மஸ் காலங்களை உண்மையாக மனநிறைவோடு கொண்டாடலாம் என நினைக்கிறேன். கடவுளின் அன்பை நம்மால் அளவிடமுடியாது என்பதை அறிந்திருக்கிறோம். பிதா குமாரன் பரிசுத்த ஆவியாகிய நம் தேவன், நம்மை முழுமையாக நேசிக்கிறார். அவர் நம்மேல் வைத்த அன்பை கிரியைகளினால் வெளிப்படுத்தியும் காட்டியிருக்கிறார். அவரைப்போல நாமும் வாழ அவர் விரும்புகிறார். அவர் விரும்பிய நற்குணங்களை வாழ்வில் செயல்படுத்தி காட்டுவதே அவர் விரும்பகிற, அங்கீகரிக்கிற கொண்டாட்டங்களாக இருக்கும் என்று நம்புகிறேன்.


## பிதாவின் அன்பு



"தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16) பிதாவாகிய தேவன் தள்ளப்பட்ட நிலையிலிருந்த நம்மை கண்ணோக்கிப் பார்த்தார். நாம் பாவத்தோடு போராடுவதை, அடிமைகளாய் வாழ்ந்ததை பார்த்தார். தேவனோடு ஓர் உறவில்லாமல் மாயையான உலகத்தால் இழுக்கப்பட்டதை பார்த்தார். நம்முடைய பரிதபிக்கப்படத்தக்க நிலையை மாற்ற எண்ணினார். நம்மை பிதாவாகிய தேவன் நினைவுகூர்ந்தார். தன் மேன்மையையும், மகிமையையும் எண்ணாமல், நம்மை மீட்க தன் சொந்த குமாரனையே நமக்கு கொடுத்து நம்மை கைதூக்கிவிட்டார். நம்மேல் வைத்திருந்த அன்பை, கிரியைகளினால் காண்பித்தார்.

பிதா நம்மேல் வைத்த அன்பை கொண்டாடும் நாம் பிறரை எவ்வாறு அன்பு செய்கிறோம் என்பதை சிந்திக்கலாமே. பிதாவைப்போல ஒடுக்கப்பட்ட, தள்ளுண்ட, மடங்கடிக்கப்பட்ட நிலையிலிருக்கும் பிறரை நம் கண்கள் பார்க்கிறதா? நம்மைச் சுற்றி என்னை தூக்கிவிட யாருமில்லையே என்று இருக்கும் மனிதர்களை நாம் காண்கிறோமா? அப்படியானால், அவர்களுக்காக நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? பிதா தன் மேனமைகளை குறித்து யோசியாமல் நம்மை அன்பு செய்தது போல, நீங்களும் உங்கள் தகுதி, மேன்மை. நீதி ஆகியவற்றை முன் நிறுத்தாமல், பிறரை கைதூக்கிட முயற்சிப்பீர்களா? "ஒளியிலே இருக்கிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைக்கிறவன் இதுவரைக்கும் இருளிலே இருக்கிறான் தன் சகோதரினிடத்தில் அன்புகூறுகிறவன் ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான்" - 1யோவான்2:9,10

## இயேசுகிறிஸ்துவின் அன்பு



"நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலை பெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், உங்களுக்கு அநுக்கிரகம் பண்ண வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்". - எபேசியர்3:17-19

ஆம், பிரியமானவர்களே, இயேசு கிறிஸ்து நம்மேல் வைத்திருக்கும் அந்த அன்பை நாம் அளக்கமுடியாதே! நம்மை இரட்சிக்கும்படி அவர் நமக்காக பாவமானார். நம்மை இரட்சிக்ககும்படி அவர் நமக்காக தன் உயிரையே கொடுத்தார். நாம் வாழும்படி, தன் வாழ்வையே நமக்காக ஊற்றிவிட்டார். இந்த இயேசுவின் அன்பை கொண்டாடும் நாம், அவர் அன்பிற்கு நன்றியுள்ளவர்களாய் இருக்கிறோமா?

இயேசு இவ்வுலகத்தில் வாழ்ந்தபோது, நம்மேல் வைத்த அன்பினால் நன்மை செய்கிறவராக சுற்றித்திரிந்தார். ஏழைகளின் பசியை ஆற்றினார், விதவையின் துன்பத்தை போக்கினார், வியாதிகளை குணமாக்கினார். ஒரு மனிதன் நல்வாழ்க்கை வாழ தேவையான இவைபோன்ற அநேக நற்காரியங்களை இயேசு செய்தார். ஊர் ஊராக சென்று இப்படி நன்மை செய்வது என்பது எளிதல்ல. சரீரத்திலும், மனதிலும், சமுதாயத்திலும் பல இடறல்களை கடந்து, தியாகமான ஓர் இருதயத்தோடு வாழ்ந்தால்தான் இயேசுவால் பலருக்க ஒளியாக இருக்கமுடிந்தது. இன்று உங்களை சுற்றி தேவையிலிருப்போருக்கு உங்கள் பதில் என்ன? உங்களிடத்திலிருக்கும் இரண்டு ஆடைகளில் ஒன்றை இல்லாதவர்களுக்கு கொடுக்க மனமுண்டா? வறுமையிலும், வியாதியிலும் இருக்கும் உங்கள் குடும்பத்தினர் உங்கள் குடும்பத்தினர், நண்பர் மற்றும் உறவினருக்கு இந்த கிறிஸ்துமஸ் காலங்களில் நீங்கள் இயேசுவைப்போல் தியாக உணர்வோடு என்ன செய்யப்போகிறீர்கள்?

"ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போல தேவனைப் பின்பற்றுவர்களாகி, கிறிஸ்து நமக்காதகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள்" எபேசியர் 5:1,2

## பரிசுத்த ஆவியின் அன்பு


"அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார். பிதாவினுடையவைகள் யாவும் என்னுடைவைகள்; அதினாலே என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார்" யோவான் 16:14,15


பரிசுத்த ஆவியானவர், பிதாவின் அன்பையும், இயேசு கிறிஸ்துவின் அன்பையும் நாம் அறிந்துகொள்ளும்படியாக செய்கிறார். அவர் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிறார். ஆதலால், ஆவியினால் நடத்தப்படுகிற எந்த மனுஷனும், அன்பில் பூரணப்பட்டவர்களாய், காணப்படுவார்கள். ஆவியின் முதற்கனியே 'அன்பு' என்பதால், நம் கொண்டாட்டங்களில் பரிசுத்த ஆவியானவரின் முழு நடத்துதல் நமக்கு அவசியமாகிறது.

ஆவியானவர் எவ்வாறு பிதாவையும், குமாரரையும் வெளிப்படுத்துவாரோ. அவ்வாறே ஆவியின் வழிநடத்துதல்களை பெற்ற நாமும், பிதாவின் அன்பையும், குமாரனின்

தியாகத்தையும் வெளிப்படுத்த அழைக்கப்படுகிறோம். நம்மைச் சுற்றி யார் என்ன தேவையோடு இருக்கிறார்களோ என்று பரிசுத்த ஆவியானவர் நமக்கு உணர்த்தும்போது, சாக்கு போக்கு சொல்லாமல் கிரியைகளினால் பிறருக்கு உதவவே நம் கொண்டாட்டங்கள் அடிப்படையாகும். அதுவே பரிசுத்த ஆவியை பெற்ற நாம் கனப்படுத்தும் வழியாம்!

"நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியானாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது" - ரோமர் 5:5






**பிதாவாகிய தேவன் அருளியது அன்பு தியாகமானது**

என் அன்பு தியாகமானதா?

**பிதாவின் அன்பு கைகொடுத்து என்னை தூக்கியது**

என் அன்பு யாரை தூக்கி நிறுத்தினது?

**குமாரனின் அன்பு தன்னையே கொடுத்து என்னை மீட்டது**

என் அன்பு இன்று என்னை இழந்து யாரை ஆசீர்வதித்தது?

**குமாரனின் அன்பு என்னை பிதாவோடு ஒப்புரவாக்கியது**

என் அன்பு இன்று சமாதானத்தை பரப்பியதா?

**பரிசுத்த ஆவியின் அன்பு எனக்காய பரிந்துபேசுகிறது**

என் அன்பு யாருக்காய் பரிதபிக்கிறது?

**பரிசுத்த ஆவியின் அன்பு பிதாவையும் குமாரனையும் வெளிப்படுத்தியது**

என் அன்பு என் தேவனை வெளிப்படுத்துகிறதா?



தேவனுடைய அன்பின் பிறப்பை புத்தாடைகளாலும், பலகாரங்களாலும், விருந்துகளோடும் கொண்டாட நினைக்கும் நீங்கள், இவைகளைவிட அவர் நீங்கள் பிறர் மீது காட்டும் அன்பினாலேயே மகிழ்கிறார் என்று அறிந்துகொள்ள விரும்புகிறார். உங்கள் கொண்டாட்டங்கள் அவர் அன்பின் பிரதிபலிப்பாக இருக்கட்டும். உங்கள் மகிழ்ச்சியை காண்கிறவர்கள் அவைகளில் கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்தும் கிரியைகளை காணட்டும்.

உங்கள் கண்கள் உங்களுக்கு அருகில் இருக்கும் உங்கள் அயலகத்தாரின் வறுமையை காணட்டும். உங்கள் செவிகள் உங்கள் நண்பரின் பிரச்சனையை தீர்க்கட்டும். உங்கள் கால்கள் தேவையிலுள்ள உங்கள் உறவினரை சந்திக்கட்டும். உங்கள் கைகள் இருப்பதை மனம் கோணாமல் உதவ நீளட்டும். உங்கள் இருதயம் தம் கடவுளின் அன்பினால் நிரப்பப்பட்டு பிறரை எந்நாளும் நேசிக்கட்டும். இப்படிப்பட்ட கிரியையுள்ள அன்புள்ளவர்களின் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள் மனநிறைவுள்ளதாய், மகிழ்சியானதாய், தேவனை மகிமைப்படுத்துவதாய் இருக்கும்! நீங்கள் கிறிஸ்துமஸ்ஸை எப்படி கொண்டாடப்போகிறீர்கள்? பிதாவின் அன்பையும், கிறிஸ்துவின் அன்பையும், பரிசுத்த ஆவியின் அன்பையும் கிரியைகளினால் வெளிப்படுத்தப் போகிறீர்களா? **தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை. நாம் ஒருவரிடத்தில் அன்பு கூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார், அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும். அவர் தம்முடைய ஆவியில் நமக்குத் தந்தருளினதாலே நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம். -** 1யோவான் 4:12.13.



கிறிஸ்துமஸ் வாழ்த்துதல்களோடு,
சகோதரி. விண்டா ராஜாசிங்

# BLESSING AND POVERTY

Matthew 6: 1 - 4 Take heed that ye do not your alms before men, to be seen of them: otherwise ye have no reward of your Father which is in Heaven. 2. Therefore when you do give your alms, do not sound a trumpet before you, as the hypocrites do in the synagogues and in streets, that they may have glory of men. Verily I say unto you, they have their reward. 3. But when you give alms, let not thy left hand know what thy right hand doeth: 4.That thine alms may be in secret: and Thy Father which seeth in secret Himself shall reward thee openly.

God's word also commands us to give to the poor; in the Old Testament and in the New Testament this giving is not the giving of tithes, or offering…or first fruits, this giving is called alms giving to the poor. Most of us don't understand what it means…it means giving money (rupees) hope that's clear enough. You might say that's a wrong doctrine, yeah….. that what most of us are, we will know the truth and truth shall set us free, Some are good givers of clothes; sometimes new sometimes used... sometimes food products or gifts and so on…but when it comes to money they are slow in doing it. Bible says here clearly that its money; the reason for that is, because a poor bro cannot pay his electric bill, or taxes or other financial needs; with the gifts he has been given has clothes and food. Now you might thing I gave my tithes just yesterday! And I just gave my offering today! Let the pastor give to the poor from what I have given.



Hebrews 7:8 says we need to understand that the man of God is called to take your tithes, offerings and first-fruits and bless you in return in .We are to give to God through him and give to the poor alms through him, why? There is explanation for it from the scriptures for all of them from, Old Testament to New Testament. You might ask, "What if a person came begging at my door, what I should do" call the pastor? No, give for your heavenly father sees your heart.

One of the mistakes I have seen one make in the area of giving is, when we invite pastors to a function or marriage function …"We need to give gifts to them for coming to BLESS" and not take gifts from them! Give to them and receive blessings from God through them it's a divine exchange. They are appointed for it also. There are so many scriptures to back it up, like Abraham Prophet Elisha, King David, Jesus, Apostles and Apostle Paul. Now you might think, so the men of God don't have to give? Bible teaches how a minister of God should give. How a ministry (church) give. Now you might think why we should give it

through the pastor or church?? You might think what? If the pastor steel some money and give little over to the poor, well if the pastor takes some its good, God will turn it into a seed, and you will get double blessing because you gave it to them both, we don't have to worry over it, its God we need to please, and its God who documents your love towards the poor, and your giving.

One who asks that question is the one who wants everyone to know about it and want to brag about it and wants to get glory for it (and Jesus says they are hypocrites and want glory and reward of men and not from our father in heaven)

Verse 1: Take heed that ye do not your alms before men to be seen of them: otherwise ye have no reward of your Father which is in Heaven and in

Verse 2: Therefore when thou doesn't thine alms, do not sound a trumpet before thee as the hypocrites do in the synagogues and in the streets, that they may have glory of men I say unto you, they have their reward……Ho no! how many rewards have we lost… this passage of scripture says that we have a reward from our heavenly Father in heaven and on earth from God and also the reward which people get from men on this earth only for being a hypocrite is praise of men praise and glory, names written in bold letters and they accepts God to thank him; but Jesus said how we ought to give alms in.

Verse 3: But when thou does alms, let not thy left hand know what thy right hand does) we very well understand that it means that no one should know your giving of alms! How is that possible; the person to whom I give wont he know? And the lord answers that question in the next verse.

Verse 4: That thine alms may be in secret and thy father which seeth in secret He shall reward thee openly.

You might think how that is possible! Should I wear a mask, or give in the dark? I heard aincident which happened to a pastor that they left money food inside their gate and left and the pastor didn't know who they were; some received money in their bank but didn't know who sent it! Now here you can give to the poor through the pastor and the pastor will give to the poor teaching him how he should give and receive from the Lord; saying the Lord gave it through the church or members of the church but not know who, .the left hand will not know what the right hand doeth.

In (Mathew 26:11 Jesus said for ye have the poor always with you………..) why did the Lord say so? Because we will give to them, but not teach them to give …… why? Because we think they are poor; They can't afford , look at the old widow she put all she had after hearing the message (….give and it shall be given unto you………..) you might think this is a prosperity gospel message, I am glad that it's not a poverty gospel MESSAGE, our God is not poor almighty,… HE IS ALL MIGHTY … Jesus didn't stop her saying oh you are poor and you are under the law its ok take it back, I believe her life changed after that.

We see in what happened when Jesus finished preaching after a long meeting… Matthew 15:32 Then Jesus called the disciples unto Him, and said "I have compassion on the multitude, because they continue with Me now three days and had nothing to eat", John 6:7 Philip answered Him, "two hundred pennyworth of bread is not sufficient for them, that everyone of them may take a little"



Verse 8: One of His disciples, Andrew, Simon peter's brother, saith unto Him

Verse 9: There is a lad here, who hath five barley loaves and two small fishes but what are they among so many.

Verse 10: JESUS SAID, MAKE THE MEN SIT DOWN, now there was much grass in the place; so the men sat down in numbers about five thousand.

Verse 11: Jesus took the loaves and when He had given thanks, he distributed to the disciples… and the disciples to…… them that were set down and likewise of the fishes as much as they would.

We don't see the little lad mention after that, why because no one knew who gave that first five loaves of bread and fish! There were five thousand and more maybe 10,000 when including women and children and all were hungry, only Jesus knew (Andrew) knew, GOD will know and the Man of God will know, but the left hand didn't know what the right hand gave, how was the five thousand fed. When they put it into the hands of ……. The God Man……. it multiplied, why because that which blocked it (………) from multiplying was removed and so it multiplied and there was left over. That's what happens when you put into the hands of the …..Man of God…..! Whatever tithes or offering or alms or first fruit, it will go through a germination process and shoot out a fresh blade of life which turns into a plant then into a tree that bears much fruit 30, 60, 100, 1000 so on… Have you noticed that the ….. God Man Jesus…… didn't make the bread; He multiplied what the lad put into His hands, and none praised the lad or rewarded him no name no fame, but the Lord not only rewarded him in the earth with 12 basket full but honored him for it is written in God's word of what he did, and we will meet him one day in heaven.. Halleluiah.

So every year, our church mission in December has a program to give to the poor to the widows and others, let us cheerfully with love to God AND man, gives to the poor.

God Bless you in the year to come. HALLELUYAH

- Pastor Benedict.


# பெலப்படுத்தும் தேவன்

**என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு பிலி 4:13**

கர்த்தருக்குள் பிரியமான சகோதர சகோதரிகளுக்கு, என் அன்பின் வாழ்த்துக்கள். இம்மட்டும் நம்மை நடத்தி பராமரித்து வந்த தேவனுக்கு ஸ்தோத்திரம். குயவன் கை களிமண் போன்ற நம்மை மண்ணாக நினைத்து ஒதுக்காமல் நம்மைப் பெலப்படுத்துவதே தேவனின் பிரியமாகும். இந்நாட்களில் எங்கும் எப்போதும் எல்லோராலும் பேசப்பட்டு வருகிற காரியம் என்னவென்றால் டெங்கு எனப்படும் விஷக்காய்ச்சல் பற்றியதே. காய்ச்சல், தலைவலி, இருமல், என்றாலே மக்களின் நினைவுக்கு வருவது டெங்குதான். கர்த்தரின் வருகைக்கு அடையாளங்களாக வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ளவைகளுள் ஒன்று கொள்ளை நோய். டெங்குவும் கொள்ளை நோய் போலத்தான் காணப்படுகிறது. எது எப்படியாக இருந்தாலும் கர்த்தர் தம்முடைய பிள்ளைகளைப் பறந்து காக்கும் பட்சியைப் போல பாதுகாப்பார் என்பதில் சந்தேகமில்லை சங்கீதம் 91-ஐ நமக்கு உரிமையாக்கிக்கொள்வோம். ஒருவேளை நீங்கள் ஏதோ ஒரு காரணத்தினால் சோர்ந்து பெலனற்று காணப்பட்டாலும் பெலப்படுத்துகிற கிறிஸ்து உங்களோடு இருக்கிறார் என்பதை மறந்துவிட வேண்டாம்.

## கர்த்தருக்குள் மகிழ்ச்சி:-

**கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன் (நெகேமியா 8:10)**



உலகில் வாழும் நாம் அனைவரும் விரும்புவது மகிழ்ச்சியான வாழ்க்கை. மகிழ்ச்சியைப் பெற நாம் பல வழிகளில் முயற்சி செய்கிறோம். ஓடி ஓடி உழைக்கிறோம். பணம் சம்பாதிக்கிறோம். உல்லாசமான இடங்களுக்கும் பூங்காக்களுக்கும் கடற்கரைக்கும் செல்கிறோம். இவை எல்லாம் கர்த்தருக்கு வெளியே உள்ள காரியங்கள் ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன் என்பது மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம் என்பதும் கர்த்தரின் வாக்கு. உண்மையான, நிலையான மகிழ்ச்சியைத் தருவது தேவனின் சமூகமேயாகும். உலகப்பிரகாராமான இடங்களுக்குச் செல்லாமல் கர்த்தருக்குப் பிரியமான இடத்துக்குச் சென்று கர்த்தரை உயர்த்துவதே தேவனுக்குப் பிரியம். அப்போது நாம் தேவ பெலனைப் பெற்றுக்கொள்கிறோம். சபை கூடி வருதலை விட்டு விடாமல் தேவனுடைய சபைக்குச் சென்று ஆராதிப்பதே தேவபெலனாகும்.


கர்த்தர் இஸ்ரவேலுக்குக் கற்பித்த மோசேயின் நியாயப்பிரமாணம் புஸ்தகத்தை எஸ்றா வாசித்த போது மக்கள் தங்கள் கைகளைக் குவித்து அதற்கு மறுமொழியாக ஆமென்

ஆமென் என்று சொல்லி குனிந்து முகங்குப்பற விழுந்து, கர்த்தரைப் பணிந்து கொண்டார்கள். அப்பொழுது எஸ்றா ஜனங்களைப் பார்த்து இந்த நாள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தமான நாள்; விசாரப்பட வேண்டாம்; கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்களுடைய பெலன் என்றான்.

அன்பான சகோதர சகோதரிகளே! பெலனைப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே இடம் சபைதான். நாம் ஆறு நாட்களும் உலகப்பிரகாரமான வேலைகளைச் செய்து வந்தாலும் ஏழாம் நாள் ஓய்வு நாள். அது கர்த்தருடைய நாள். மகிழ்ச்சியான நாள். நம்முடைய வாகனங்களுக்கு petrol நிரப்புவதைப் போல, ஒரு Battery-ஐ ஜார்ஜா செய்வது போல் நம்மை ஆவியில் பெலப்படுத்தி, சந்தோஷத்தாலும், சமாதானத்தாலும் நிறைத்து தேவ ஞானத்தைக் கொடுத்து, நாம் நடக்க வேண்டிய வழியைக் கற்று கொடுத்து, நாம் நடக்க வேண்டிய வழியைக் கற்று கொடுத்து பெலப்படுத்துகிற இடம் தேவ சபையாகும். ஆகவே சபை ஆராதனை ஒழுங்குகளில் தவறாமல் கலந்து கொள்ளுங்கள். கர்த்தர் பெலப்படுத்துவார். சோர்வை நீக்கிப் போடுவார்.

## லேசான காரியம்:-

பெலமுள்ளவனுக்கும் பெலனற்றவனுக்கும் சிறியவனுக்கும் பெரியவனுக்கும் உதவி செய்வது கர்த்தருக்கு லேசான காரியம். பெலிஸ்தரின் கையிலிருந்து இஸ்ரவேலரை மீட்டது போல, மீதியானியரின் கையிலிருந்து இஸ்ரவேலரை மீட்க வேண்டிய பொறுப்பை கர்த்தர் கிதியோன் கையில் கொடுத்தார். மீதியானியர் இஸரவேலரை மிகவும் ஒடுக்கியதால் அவர்கள் கர்த்தரை நோக்கி முறையிட்டனர். கிதியோன் மீதியானியரின் கையிலிருந்து கோதுமை தப்புவிக்கிறதற்காக ஆலைக்குச் சமீபமாய் அதைப் போரடித்தான். கிதியோனின் குடும்பம் மிகவும் எளியது. அவன் தகப்பன் வீட்டில் எல்லாரையும் விட கிதியோன் மிகவும் சிறியவன். ஆனாலும் கர்த்தர் அவனைப் பார்த்து பராக்கிரமசாலியே! கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார். அதைக் கேட்ட கிதியோன் மிகவும் பயந்தான். கர்த்தர் அவனைத் தெரிந்துகொண்டபடியால் அவனை விடவில்லை. உனக்கு இருக்கிற இந்த பெலத்தோடே போ. நீ இஸ்ரவேலரை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பாய் உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார். மேலும், நான் உன்னோடே கூட இருப்பேன். ஒரே மனுஷனை முறிய அடிப்பது போல நீ மீதியானியரை முறிய அடிப்பாய் என்றார். அதைப் போல பகைவரை வென்று ஜெயம் பெற்றான்.



தேவ பிள்ளைகளே! நீங்கள் உங்களைக் குறித்துத் தாழ்மையாக நினைக்கின்றீர்களா! எனக்குப் பணம், அறிவு, படிப்பு, உலகஞானம் எதவுமே இல்லை எனக்கு எதிரிட்டு வருகிற உலக மனிதனை நாம் எப்படி ஜெயிப்பேன் என்று நினைக்கின்றீர்களா? சிறியவனான இருந்த கிதியோன் எப்படி ஜெயித்தானோ அப்படியே நீங்களும் தேவ வார்த்தையை நம்பி செயல்பட்டால் ஜெயிக்க முடியும் தேவ வாக்குத்தத்தத்தை நம்புங்கள். அதே பெலனைக் கர்த்தர் உங்களுக்கும் தருவார். குதிரை யுத்த நாளுக்காக ஆயத்தமாக்கப்படும் ஜெயமோ கர்த்தரால் வரும். உருவத்தில் சிறிய தாவீது எப்படி கோலியாத்தைச் ஜெயிக்க முடிந்தது.

# 40 நாட்கள் விசேஷ ஜெபம்

## நவம்பர் 21 முதல் டிசம்பர் 30 வரை காலை 6.30 மணி முதல் 7.30

உங்களுக்கு எதிரிட்டு வரும் பகைவன் உருவத்தில் பெரியவனாக இருந்தாலும் பயப்படவேண்டாம். தாவீதுக்குப் பெலன் கொடுத்த தேவன் உங்களுக்குத் தருவார். இது அவருக்கு லேசான காரியம்.

## பெலப்படுத்தும் துதியும் உபவாசமும்:-

**அப்பொழுது யோசபாத் பயந்து, கர்த்தரைத் தேடுகிறதற்கு ஒருமுகப்பட்டு, யூதாவெங்கும் உபவாசத்தைக் கூறுவித்தான் - 2நாளா 20:3**

துதிகளின் மத்தியில் வாசம் பண்ணுகிறவர் கர்த்தர். துதித்தலே இன்பமும் ஏற்றதுமாகும். துதியில் பிரியப்படுகிற நம் தேவனை நாம் இடைவிடாமல் துதித்தால் நமக்குப் பெலனும் ஜெயமும் வருவது நிச்சயம். மோவாப் புத்திரரும் அம்மோன் புத்திரரும் ஒன்று கூடி யோசபாத்துக்கு விரேதமாக யுத்தம் பண்ண வந்தார்கள். அதைக் கண்ட யோசபாத் தேவ சமூகத்துக்கு ஓடி உபவாசித்து ஜெபித்தான். யூதா ஜனங்களும் கர்த்தரைத் தேட வந்தார்கள். தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர். இந்த ஏராளமான கூட்டத்திற்கு முன்பாக நிற்க எங்களுக்குப் பெலனில்லை. நாங்கள் செய்யவேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆகையால், எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிறது என்று



யோசபாத் உபவாசித்து ஜெயித்தான் (2 நாளா 20:12) அப்பொழுது லேவியன் போல கர்த்தருடைய ஆவி இறங்கி, இந்த யுத்தம் உங்களுடையதல்ல; தேவனுடையது நீங்கள் தரித்து நின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள். பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் என்றான். அதனைக் கேட்ட யோசபாத் கர்த்தரைத் துதிப்பதற்காக பாடகர் குழுவை நிறுத்தினான். தேவ ஜனங்கள் பாடித் துதிசெய்யத் தொடங்கின உடனே எதிரிகள் தங்களுக்குள்ளே ஒரவருக்கொருவர் வெட்டுண்டு விழுந்தார்கள்.

அன்பானவர்களே! வெள்ளம் போல சாத்தானோ. பகைவரோ, பிரச்சனையோ, மனக்கலக்கங்களொ, குழப்பங்களோ வந்தாலும் பயப்பட வேண்டியத் தேவையில்லை யோசபாத் செய்தது போல உபவாசியுங்கள். துதித்துப்பாடி தேவனை மகிமைப்படுத்துங்கள். பாடித் துதிக்க ஆரம்பத்தில் கொஞ்சம் கடினமாகத்தான் இருக்கும். உங்களுக்குத் தெரிந்த சில பாடல்களை மட்டும் பாடிக் கொண்டே இருங்கள். அப்போது இதனை உங்கள் வாழ்கையில் செயல்படுத்தங்கள்.. தேவபெலனைப் பெற்றுக்கொள்ளலாம். to be continued..

**- Sis. சுந்தரி**

# வேத வினாக்கள்

1. தேசத்தை வேவு பார்க்க மோசே, யோசுவாவை அனுப்பினபோது யோசுவாவிற்கு வயது என்ன?
2. நீ பெரிய காரியங்களை செய்வாய், நீ மேன்மேலும் பலப்படுவாய் யார் யாரைப்பார்த்து கூறியது?
3. தன் மகளை கண்டவுடன் தன் வஸ்திரங்களை கிழித்தவன் யார்?
4. கர்த்தருடைய பெட்டி யாருடைய வீட்டில் எத்தனை மாதம் இருந்தது?
5. சாமுவேலின் ஊர் எது?
6. தாவீது பெலிஸ்தரின் நாட்டில் எவ்வளவு நாட்கள் குடியிருந்தான்?
7. தாவீது அர்வனாவின் களத்தை எவ்வளவு கிரயத்துக்கு கொண்டான்?
8. கடற்கரை மணலத்தனையான மனோவிருத்தியை பெற்றவன் யார்?
9. ஏனாக்கியருக்குள்ளே பெரிய மனுஷனாயிருந்தவன் யார்?
10. நான்கு லட்சம் காலாட்கள் எந்த புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது?

# கடந்தமாத வேத வினாக்களுக்கான விடைகள்

1. காலேப் உபாகமம் 1:36
2. லேவி உபாகமம் 10:9
3. கோராகு, தாத்தான், அபிராம் எண்ணாகமம் 16:24,32
4. 2 1/2 கோத்திரம் - ரூபன், காத், மனாசேயின் பாதி கோத்திரம் எண் 34:14,15
5. பினெகாஸ் எண்ணாகமம் 25:11,12
6. ஆகான் யோசுவாவைப்பார்த்து கூறியது யோசுவா 7:20
7. முதலாம் நாள் மற்றும் ஏழாம் நாள் லேவியராகமம் 23:7,8
8. சந்தன மரம் எண்ணாகமம் 24:6
9. அமலேக்கின் பேரை உபாகமம் 25:19
10. கர்த்தருடைய சேனையின் அதிபதி யோசுவாவை நோக்கி யோசுவா 5:15




**வேத வினா போட்டி ஜனவரி 7, 2018**
நிருபங்கள் : ரோமர் முதல் யூதா வரை

# சமையல்

## வத்தக்குழம்பு

### தேவையான பொருட்கள்

கடுகு - 1 டிஸ்பூன்
உளுத்தம்பருப்பு - 1டிஸ்பூன்
பெருங்காயம் - 1 சிட்டிகை
வெந்தயம் - 1/2 டிஸ்பூன்
சீரகம் - 1/2 டிஸ்பூன்
சின்ன வெங்காயம் - 100கி
பூண்டு - 50கி
சுண்டை வற்றல் - 2 டிஸ்பூன்
புளி, உப்பு - எலுமிச்சம்பழ அளவு
மிளகாய்ப்பொடி - 1 டிஸ்பூன்
மல்லிப்பொடி - 2 டிஸ்பூன்
மாங்காய்வற்றல் - 6
நலலெண்ணெய் - தேவையான அளவு
மிளகு - 1/2 ஸ்பூன்




### செய்முறை :-

ஒரு வாணலியில் எண்ணெய் விட்டு காய்ந்தவுடன் கடுகு போட்டு வெடிக்கவிடவும். வெடித்தவுடன் உளுத்தம்பருப்பு பெருங்காயம் வெந்தயம் சீரகம் போட்டு தாளிக்கவும். உரிதது அரிந்த வெங்காயத்தைப் போட்டு வதக்கவும். பூண்டு வறுத்தெடுத்த சுண்டை வற்றலலைப் போட்டு புளிக்கரைசலை ஊற்றவும். பின்னர் மிளகாய்ப்பொடி, மஞ்சள்பொடி மல்லிப்பொடி ஆகியவற்றைப் போட்டு மாங்காய் வற்றலைப் போட்டு கொதிக்கவிடவும். நல்லெண்ணெய் ஊற்றவும். மிளகைப் பொடித்து சேர்க்கவும். எண்ணெய் வற்றி சுண்டியதும் இறக்கவும். சுண்டை வற்றலில் உப்பு சேர்ந்திருப்பதால் மிகவும் குறைந்த அளவே சேர்க்கவும். சுண்டை வற்றல் குழம்பு சற்றெ கசப்பாக இருந்தாலும் உடல் நலத்துக்கு மிகவும் ஏற்றது. சாதத்தில் பிசைந்து சாப்பிடவும். தயிர் சாதத்திற்கு தொட்டுக் கொள்ளவும் பயன்படுத்தலாம்.

# முந்திரிகொத்து

## தேவையான பொருட்கள்

பச்சரிசிமாவு - 250கி
பாசிப்பயிறு - 200கி
பனைவெல்லம் - 300கி
கருப்பு எள் - 25கி
மஞ்சள்பொடி - கால் ஸ்பூன்
துருவிய தேங்காய் - 1/2 கப்
எண்ணெய் - 1 லி
ஏலக்காய் - 6



## செய்முறை :

முதலில் பாசிப்பயிறை வாசனை வரும்வரை கருகி விடாமல் வறுக்கவும். தேங்காயை துருவி அதையும் வதக்கி கொள்ளவும். ஏலக்காயை பொடித்து தூளாக்கவும். வறுத்த பாசிப்பயிற்றையும் தூளாக்கி கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் பொடி செய்த வெல்லத்தைப் போட்டு அதனுடன் தண்ணீர் சேர்த்து கொதிக்க விடவும். வெல்லம் இளகி கம்பி பாகாக மாறியதும் பாசிப்பயிறை சிறிதாக சேர்த்துக் கிளறவும். துருவி வதக்கிய தேங்காய் ஏலப்பொடி வறுத்த எள் ஆகியவற்றை சேர்க்கவும். ஆறியவுடன் நெல்லிக்காய் அளவு உருண்டைகளாக உருட்டிக்கொள்ளவும்.

பச்சரிசி மாவு மஞ்சள்பொடி உப்பு ஆகியவற்றை சிறிது தண்ணீர் விட்டு பஜ்ஜி மாவு பதத்திற்கு கரைக்கவும். வாணலியில் எண்ணெய் காய விடவும். எண்ணெய் காய்ந்தவுடன் பாசிப்பயிறு கலவையை மாவில் முக்கியெடுத்து நாலைந்து உருண்டைகளாகப் போட்டு வறுத்து எடுக்கவும். அனைத்துப் பக்கங்களிலும் வெந்தவுடன் இறக்கி சுவைக்கலாம்.

# மருத்துவம்



1. டெங்கு காய்ச்சலுக்கு நிலவேம்பு தண்ணீர் குடிக்கவேண்டும்.
2. பப்பாளி இலையை வேகவைத்து குடிக்கவேண்டும்.
3. சளி வராமல் இருக்க சின்னவெங்காயம், கற்கண்டு போட்டு அரைத்து குடிக்கவேண்டும்.
4. ஆவாரம்பூ, இலை இரண்டையும் வேகவைத்து குடிக்கவும், சர்க்கரை நோய்க்கு ரொம்பவும் நல்லது.



# சபையின் ஆராதனை ஒழுங்குகள்




## டிசம்பர் 2017

| நாள் | கிழமை | ஜெபங்களும் நேரங்களும் |
|---|---|---|
| 1 | வெள்ளி | மாலை ஆராதனை - மாலை 06.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை (சபையில்) |
| | | திருச்செந்தூரில் தொடர் உபவாச ஜெபம் - காலை 10.00 முதல் 1.00 வரை |
| 2 | சனி | திருச்செந்தூரில் தொடர் உபவாச ஜெபம் - காலை 10.00 முதல் 1.00 வரை |
| 3 | ஞாயிறு | ◯ பௌர்ணமி / ஓய்வுநாள் ஆராதனை - காலை 09.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| | | இரவு ஜெபம் - இரவு 10.00 மணி முதல் 12.00 மணி வரை (சபையில்) |
| 5 | செவ்வாய் | ஆலோசனை ஜெபம் - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 6 | புதன் | ஆலோசனை ஜெபம் - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| | | ஜெபக்குறிப்புகளுக்காக மன்றாட்டு ஜெபம் - மாலை 6.00 முதல் 8.00 மணி வரை (சபையில்) |
| 7 | வியாழன் | ஆலோசனை ஜெபம் - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 8 | வெள்ளி | மாலை ஆராதனை - மாலை 06.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை (சபையில்) |
| 9 | சனி | கிராம ஊழியம் - காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை |
| 10 | ஞாயிறு | ஓய்வுநாள் ஆராதனை - காலை 09.30 மணி முதல் மதியம் 12.00 மணி வரை (சபையில்) |
| | | வாலிபர் கூட்டம் - காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 11 | திங்கள் | ஆயத்த ஜெபம் - காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 12 | செவ்வாய் | ஆலோசனை ஜெபம் - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 13 | புதன் | ஆலோசனை ஜெபம் - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| | | ஜெபக்குறிப்புகளுக்காக மன்றாட்டு ஜெபம் - மாலை 6.00 முதல் 8.00 மணி வரை (சபையில்) |
| 14 | வியாழன் | ஆலோசனை ஜெபம் - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 15 | வெள்ளி | மூன்று நாள் உபவாச ஜெபம் முதல் நாள் |
| 16 | சனி | மூன்று நாள் உபவாச ஜெபம் இரண்டாம் நாள் |
| 17 | ஞாயிறு | மூன்று நாள் உபவாச ஜெபம் மூன்றாம் நாள் / ● அமாவாசை ஜெபம் - காலை 10.00 மணி முதல் மதியம் 1.30 மணி வரை (சபையில்) |
| 19 | செவ்வாய் | ஆலோசனை ஜெபம் - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 20 | புதன் | ஆலோசனை ஜெபம் - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| | | ஜெபக்குறிப்புகளுக்காக மன்றாட்டு ஜெபம் - மாலை 6.00 முதல் 8.00 மணி வரை (சபையில்) |
| 21 | வியாழன் | ஆலோசனை ஜெபம் - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 22 | வெள்ளி | மாலை ஆராதனை - மாலை 06.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை (சபையில்) |
| 24 | ஞாயிறு | ஓய்வுநாள் ஆராதனை - காலை 09.30 மணி முதல் மதியம் 12.00 மணி வரை (சபையில்) |
| | | வாலிபர் கூட்டம் - காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 25 | திங்கள் | இயேசு கிறிஸ்துவின் பிறந்தநாள் பண்டிகை - காலை 08.00 மணி முதல் 10.00 மணி வரை |
| 26 | செவ்வாய் | ஆலோசனை ஜெபம் - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| | | இரவு ஜெபம் - இரவு 10.30 மணி முதல் 12.00 மணி வரை (சபையில்) |
| 27 | புதன் | ஆலோசனை ஜெபம் - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| | | ஜெபக்குறிப்புகளுக்காக மன்றாட்டு ஜெபம் - மாலை 6.00 முதல் 8.00 மணி வரை (சபையில்) |
| 28 | வியாழன் | ஆலோசனை ஜெபம் - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 29 | வெள்ளி | மாலை ஆராதனை - மாலை 06.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை (சபையில்) |
| 31 | ஞாயிறு | வருடத்தின் கடைசி ஞாயிறு ஸ்தோத்திர பண்டிகை - காலை 09.30 முதல் 12.00 வரை |
| | | வருடத்தின் கடைசி நாள் முழு இரவு ஸ்தோத்திர ஆராதனையும் 2018 ஆண்டு புதுவருட ஆராதனையும் - இரவு 10.00 முதல் காலை 2 மணி வரை |





தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக ஸ்தோத்திரம் (2 கொரி 9:15)

# கிறிஸ்துமஸ் சிறப்பு ஆராதனை

**டிசம்பர் 25**
**திங்கட்கிழமை**

**காலை 8மணி முதல்**
**9.30 மணி வரை**

**இயேசுவின் பிறப்பு, மனுகுலத்தின் மகிழ்ச்சி!**

**சபையாக மகிழ்ந்து கொண்டாடிட அழைக்கிறோம்!**

கர்த்தர் நமக்கு பெரிய காரியங்களைச் செய்தார்
இதினிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம் (சங்126:3)

வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர் (சங் 65:11)

# பழைய வருட ஸ்தோத்திர ஆராதனை
# &
# புது வருட வாக்குத்தத்த ஆராதனை

டிசம்பர் 31, இரவு 10.00 மணி முதல்
ஜனவரி 1, அதிகாலை 1.30 மணி வரை

**தேவன் செய்த நன்மைகளை எண்ணி துதித்திட!**
**தேவன் கொடுக்க காத்திருக்கும் ஆசீர்வாதங்களை பெற்றிட!**
**ஸ்தோத்திரத்தோடும், ஜெபத்தோடும்,**
**இரவு விழிப்பு ஆராதனையில் பங்குபெறுங்கள்!**

கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார் (யோவேல் 2:21)

RNI No. TNTAM/2914/60710

## ஆத்மநேசர் ஜெப ஐக்கியத்தில்

## 2017ஆம் வருட டிசம்பர் மாத 3 நாள் தொடர்

# உபவாச ஜெப முகாம்



### நாளும் நேரமும்

# டிசம்பர் 15,16,17

வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் ஞாயிறு 2.30 மணி வரை

### ஜெப முகாமில் கலந்துகொள்கிறவர்கள் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்குகள்

- ஜெபத்துடனும் உபவாசத்துடனும் கலந்து கொள்ளுங்கள்
- ஜெபத்தில் கலந்துகொள்ள விருப்பம் உள்ளவர்கள் டிசம்பர் 1ஆம் தேதிக்குள் உங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளுங்கள்
- முகாமில் தங்குவதற்கு பதிவ செய்பவர்கள், கணவன் அல்லது பெற்றோரின் அனுமதி பெற்று வரவேண்டும்
- மூன்று நாட்களும் ஜெப முகாமில் தங்க வேண்டும்
- தங்குவதற்கு பெண்களுக்கு தனி இடமும், ஆண்களுக்க தனி இடமும் உண்டு
- வேதாகமம், பேனா, நோட்டு, படுக்கை, டம்ளர், உடைகள் முதலியவை கொண்டு வரவும்
- வியாதியஸ்தர்கள், பிசாசின் பிடியில் உள்ளவர்கள் ஞாயிறு அன்று மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்
- ஜெப நேரங்களில் வெளி நபர், பார்வையாளர்களுக்கு அனுமதி இல்லை
- 15 வயதுக்கு கீழ் உள்ளவர்களுக்கு அனுமதி இல்லை
- கைக்குழந்தை உள்ளவர்களுக்கு அனுமதி இல்லை




**Owned and Published by Rev. V. ISRAEL DEVADASAN**

Printed by : R. Venkatesan at ANBU OFFSET PRINTERS, No.22/12, South Mada Street, Chinna Kancheepuram - 631 501 and Published from No.2-106, Agaram Main Road, Agaram Then, Mappedu Post, Selaiyur, Chennai - 600 073

Editor: Rev. Israel Devadasan